ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியல் யாப்பு முன்மொழிவுகள்

அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான
அனைத்துக்கட்சி கமிட்டியினதும்
நிபுணர்கள் குழுவினதும்
பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டவை

ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா)

மார்ச் 2007

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அரசியல் யாப்பு முன்மொழிவுகள்

அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான
அனைத்துக்கட்சி கமிட்டியினதும் நிபுணர்கள்
குழுவினதும் பரிசீலனைக்கு
முன்வைக்கப்பட்டவை

**ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா)**

மார்ச் 2007

தொடர்புக்கு

29-ஏ, வாவிக்கரை வீதி
மட்டககளப்பு
தொலைபேசி : +94652225179

310 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி : +94212222022

தொலைபேசி : +94112505372
தொலைநகல் : +94112552840
மின் அஞ்சல் : efrlf_pathmanabha@yahoo.com
இணையம் : http://www.eprlf.net

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | 5 |
| | அறிமுகவுரை | 7 |
| 1. | இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு | 17 |
| 2. | மத்திய அரசிலோ அன்றி மாகாண அரசுகளிலோ பெரும்பான்மை மேலாதிக்கம் இல்லாதிருத்தல் | 18 |
| 3. | ஈரவை நாடாளுமன்ற முறை | 18 |
| 4. | குடியரசின் ஜனாதிபதியும், பிரதம அமைச்சரும் | 20 |
| 5. | உப ஜனாதிபதி | 21 |
| 6. | இன - மத சார்பற்ற அரசை நிறுவுதல் | 21 |
| 7. | வடக்கு கிழக்கு மாகாணம் | 22 |
| 7a) | மாகாண அரசின் எல்லைப்பகுதிகள் (அதிகார பகிர்வுக்கான அலகு) | 22 |
| 7b) | முஸ்லீம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த அரசியல் ஒழுங்குகள் | 22 |
| 7c) | நிலப்பரப்புகளை மீள் வரைதல் | 25 |
| 7d) | அம்பாரை தேர்தல் பிரிவை அடுத்துள்ள மாகாணத்துடன் சேர்த்தல் | 26 |
| 7e) | வெலி ஓயா திட்டத்தினை மீள்வடிவமைத்தல் | 26 |
| 7f) | திருகோணமலை எல்லைக்கிராமங்களை மீள்வரை செய்தல் | 27 |
| 7g) | கிழக்கின் எதிர்காலம் | 27 |
| 7h) | ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கே இலங்கையின் ஐக்கியத்தை உருவாக்கும். | 28 |
| 8. | மாகாண சட்டசபை | 29 |
| 9. | ஆளுநர் | 30 |
| 10. | மாகாண அரசாங்கம் | 32 |

பக்கம்

11. மாகாணத்தில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்தல், சட்டசபையை இடைநிறுத்தல், கலைத்தல் மற்றும் மாகாண ஆட்சியை நீக்குதல் 32

12. மாகாண அரசாங்க முறைமையைப் பேணி காத்தல். 33

13. மாகாண அரசின் பொது நிர்வாகம் 35

14. மாகாணத்தின் நீதித்துறை நிர்வாகம் 36

15. மாகாண சட்டமா அதிபர் / பிரதம சட்டவாதி 37

16. மாகாண சட்ட சபையின் அடிப்படை உரிமைகள் 37

17. மாகாணத்தின் அரசியல் யாப்பு 38

18. மாகாண அரசாங்கத்தின் உருவாக்கம் 38

18a) அமைச்சர்கள் அவை உருவாக்கம் 38

18b) மாகாண அமைச்சர்களின் எண்ணிக்கை எல்லை 40

19. நிதி அதிகாரப் பகிர்வு 41

19a) மாகாணத்தின் நிதி 42

19b) மத்திய அரசாங்க நிதி 44

19c) தேசிய பொருளாதார திட்டமிடல் - ஆணைக்குழு 46

20. அரச நிறுவனங்களின் இன விகிதாசாரம் 47

20a) உண்மையான தேசிய பாதுகாப்பு படையை அமைப்பதற்கு 48

20b) அரசாங்க நிர்வாக சேவை, மற்றைய சேவைகளின் இன விகிதாசாரம் 50

இணைப்பு - 1
நாடாளுமன்றத்தினால் மட்டுமே சட்டவாக்கங்கள் செய்யப்படுவதற்கு உரியதான விடயங்கள் 51

இணைப்பு - 2
மாகாண சட்டசபைகளால் மட்டுமே சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு உரியதான விடயங்கள் 58

# கட்சிப் பொதுச் செயலாளரின் அணிந்துரை

இலங்கையின் முன்னேற்றத்திற்கும் சுபீட்சத்திற்கும் சொல்லொணாப் பேரழிவுகளை ஏற்படுத்திய இனப் பிரச்சினையை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதற்கு, அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் இன்னொரு வரலாற்றுச் சந்தர்ப்பம் என எமது கட்சி நம்புகின்றது.

எமது நாட்டிலுள்ள தேசப்பற்றுள்ள அரசியல் சக்திகள், நாட்டின் பன்மைக் கலாச்சாரத் தினையும், பன்மைத்துவத் தன்மையையும் அங்கீகரித்து, ஆக்கமானதும், பலமானதும் ஒற்றுமையானதுமான இலங்கையைக் கட்டியெழுப்பும் சவால்களுக்கு உயர்ந்த பங்களிப்புகளை ஆற்றும் என்று தோழர் பத்மநாபாவின் ஈ.பி.ஆர்.எல்.எவ் மிகுந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் கொண்டுள்ளது.

இந்த நம்பிக்கையுடனான எதிர்பார்ப்புக்களுடன்தான், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருக்கும் அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகளில் முழுமையாக எம்மையும் ஈடுபடுத்திக் கொள்ள நாம் முடிவு செய்தோம். அரசியல் யாப்பு நிபுணர்கள் குழுவின் பெரும்பான்மையானோரின் சிபாரிசுகளையும், அனைத்துக கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளையும் நாம் கவனமாகப் பரிசீலித் துள்ளோம். எமது பார்வையில், அரசியல்யாப்பு சீரமைப்புகள் தொடர்பாக கருத் தொற்றுமையை உருவாக்கும் செயல்முறைகள் முன்னுக்கு நகர்த்தப்படுவதற்கான உறுதியான சமிக்ஞைகள் தெரிகின்றன. நாட்டிலுள்ள ஜனநாயக சக்திகள் இந்த செயல்முறைகளை தோல்வியடைய விடமாட்டார்கள் எனவும் நாம் நம்புகிறோம்.

பிரதான அரசியல் கட்சிகளுடன் நாங்கள் பரவலான கலந்துரையாடல்களை மேற் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக மாண்புமிகு அமைச்சர்கள் டியூ குணசேகரா அவர் களுக்கும், பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களுக்கும், இனப்பிரச்னை தீர்வு தொடர்பான அவர்களின் செயல்முறைகளில் நாம் ஈடுபடுவதற்கு எமக்கு ஊக்குவிப்பும், ஆதரவும் அளித்தமைக்கு எமது கட்சியின் சார்பில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்ப் பேசும் மக்கள் சமூகத்தினைச் சேர்ந்த தலையாய புத்தி ஜீவிகளுடனும், செயலூக்கமுடையோருடனும் கலந்தாலோசித்து அவர்களது அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுள்ளோம். அவர்கள் அளித்த மதிப்பான விமர்சனங்களும், பங்களிப்புகளும் நிச்சயமாக இந்த ஆவணத்திற்கு அணி சேர்த்திருக்கின்றன.

முதலாவது வடக்கு-கிழக்கு மாகாண சபையில் நாம் தலைமைத்துவத்தில் இருந்த வகையாலும், அதன் பின்னர், அரசியல் தீர்வு காணவென தொடர்ந்து வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு முயற்சிகளிலும் நாம் தொடர்ச்சியாக பங்குபற்றிய அடிப்படையிலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்த விடயத்தில் தனித்தன்மையான தகுதியைக் கொண்டிருக்கிறது.

அரசியற் தீர்வுக்கான விடயத்தில், அனைத்து மட்டங்களிலும், தேசிய அளவிலும் மாகாண அளவிலும் மானசீகமானதுமான கலந்துரையாடல்களும் விவாதங்களும் மேற்கொள்ளப்படுவது அவசியமான உடனடியான தேவையாகும். ஈற்றில், ஒரு தீர்வு நடைமுறைச் சாத்தியமாவதற்கு, சகல சமூகத்தினரினதும் பிரிவினரதும் கருத் தொற்றுமையை அது பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும். நேர்மையாகவும் உண்மை யாகவும் மக்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரையும், சமாதானமான முடிவை எய்துவதற்காக முன்வைக்கப்படும் அரசியல் முன்மொழிவுகள் மீது அக்கறையோடு கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்படி நாம் வேண்டுகிறோம்.

அரசியல்ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாக நாம் கருதுவனவற்றையும், அவற்றிற்கான அரசியல் தீர்வுகளையும் பிரதிபிலிப்பதையே இந்த ஆவணத்தின் பிரதான நோக்கமாக நாம் கொண்டுள்ளோம். இந்த ஆவணத்திலிலுள்ள முன்மொழிவு களின் உள்ளடக்கங்கள், அரசியல்யாப்புக்கான கட்டாய சொற்பதங்களுடனோ அல்லது சட்டங்களுக்குரிய திட்டமான முறைகளுடனோ எழுதப்படவில்லை. இவ் ஆவணத்தில் நாம் முன்வைத்துள்ள விடயங்களின் மீதும், அரசியல் தீர்வுக்கான தீர்மானங்கள் மீதும், காத்திரமானதும் பயனுள்ளதுமான கருத்துப் பரிமாற்றங்களை ஊக்குவிப் பதற்கு எமது இந்த முயற்சி பங்களிக்கும் என நாம் நம்புகிறோம்.

**தி.சிறிதரன்**

பொதுச்செயலாளர்

ஈ.பி.ஆர்.எல்.எவ் (பத்மநாபா)

மார்ச், 2007

# அறிமுகவுரை

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் ஒரு ஸ்தம்பித்த நிலையில் தொடர்ந்தும் இருப்பது, நாட்டின் அனைத்து மக்களுக்கும் - குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் மக்களுக்கு மிகப் பெரிய அளவிலான கஷ்டங்களையும் சொல்லொணாக் கொடுந் துன்பங்களையும் விளைவித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த இரு தசாப்தங்களில் மட்டுமே, எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ பத்து இலட்சம் மக்கள் அகதிகளாக இந்தியாவிற்கும் மேலைத்தேய நாடுகளுக்கும் புகலிடம் தேடிச் சென்று விட்டார்கள். ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்டோர் தங்களது சொந்த நாட்டுக்குள்ளேயே இடம் பெயர்க்கப்பட்டு, வீடு வாசல்களை இழந்து, நிர்க்கதி யாக்கப்பட்டு விட்டார்கள். குறிப்பாக வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள், தங்களது அடிப்படை உரிமைகளும், சுதந்திரவாழ்வும் பறிக்கப்பட்டு, அடிமை வாழ்க்கைக்கு ஆளாக்கப்பட்டு விட்டார்கள். உயிர் இழப்புகளும் பேரழிவுகளும் மட்டுந்தான் நிச்சயம் என்ற அபாக்கிய நிலையில், தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்பேரிடர் களுக்கு வெகு சீக்கிரத்திலேயே ஒரு முடிவு ஏற்படாதா என்ற ஏக்கங்களுடனும், அங்கலாய்ப்புகளுடனும் அவர்கள் நடைப் பிணங்களாக வாழ்க்கைக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் என வேறுபாடின்றி நாட்டுமக்கள் அனைவரையுமே இந்தப் போர் பாழ்படுத்திவிட்டது.

தொடர்ந்து கொண்டேயிருக்கும் இந்த விசனகரமான நிலைமையின் மூலகாரணம் அரசியல் தொடர்பானதே என்பதை இலங்கையின் சகல சமூகங்களையும் சார்ந்த அனைத்து தலைவர்கள் அடங்கலாக - சம்பந்தப்பட்ட அனைவரும் ஒப்புக்கொள் கின்றனர். வெகு விரைவிலேயே ஓர் அரசியற் தீர்வினைக் கொண்டுவராவிட்டால் இச் சோக நிலைமை மோசமாவதைத் தடுத்து நிறுத்த முடியாது. தற்போதைய சீரழிவுப் பாதையின் போக்கை மாற்ற வேண்டு மானால், மேலும் காலம் தாமதிக்காது ஓர் அரசியற் தீர்வினை நடைமுறைக்குக் கொண்டுவருவது இன்றியமையாததாகும்.

கடந்த அரை நூற்றாண்டாக, இந்த இனப் பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பாக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. இவ்விடயத்தில் முதல் முயற்சி 1957ம் ஆண்டு பண்டார நாயகா-செல்வநாயகம் ஒப்பந்தம் மூலமாக ஆரம்பிக்கப்பட்டது. சமீபத்திய முயற்சி களாக, திருமதி. சந்திரகா குமாரதுங்காவின் தலைமையிலான 1995ம் ஆண்டிலிருந்து 2002ம் ஆண்டு வரையிலான அரசாங்கத்தினாலும், 2002ம் ஆண்டிலிருந்து 2004ம் ஆண்டு வரை திரு.ரணில் விக்கிரமசிங்கா வினாலும் மேற்கொள்ளப்பட்டன.

இக் கால கட்டங்களில், இப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்தியாவும் மற்றைய சர்வதேச நாடுகளும் கணிசமான முயற்சிகளில் ஈடுபட்டன. இந்த முயற்சிகள் யாவும் ஒரு நிலையான அரசியல் தீர்வை நோக்கி முன்னேறவில்லை என்பதைப் புரிந்து கொள்வது முக்கியமானது.

அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வின் அடிப்படையிலான ஒரு கௌரவமான அரசியற் தீர்வுதான் இலங்கையின் தமிழ் மக்களில் மிகப் பெரும்பான்மையோரது பேரவா என்பதே எமது தீர்மானகரமான அபிப்பிராயமாகும். தமிழ்மக்களது ஆர்வமும் ஆசையும், ஓர் ஐக்கிய இலங்கை என்ற கோட்பாட்டுக்குள், அவர்களது உண்மையானதும் நியாயமானதுமான குறைகளை நிவர்த்தி செய்யவல்ல ஓர் அரசியற் கட்டமைப்பேயன்றி, ஏற்றுக்கொள்ள முடியாத எதுவித மிதமிஞ்சிய கோரிக்கைகள் அல்ல. இப்படியான அரசியற் கட்டமைப்பு, சர்வதேச தரங்களுக்கும் நீதிக்கும் உகந்த அளவிலான, நீதியானதும் நியாயமானதாகவும் இருத்தல் வேண்டும். புலிகளின் ஒப்புதலுக்குக் காத்திருப்பதாகக் கூறிக் கொண்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கான ஒரு கட்டுமானத்தை வழங்குவதில் காலம் தாழ்த்துவது, இலங்கை அரசினதும் சர்வதேச சமூகத்தினதும் கெடுதிகள் நிறைந்த பெரும் தவறு என்பதும் எமது அபிப்பிராயமாகும்.

மிகவும் சிக்கலான இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான அணுகுமுறைகள் பின்வருவனவற்றை கருத்திற் கொள்ள வேண்டும்-:

1) பிரச்சினையின் அடிப்படை விடயங்களும் அதனது வரலாற்றுப் பின்னணி பற்றிய தெளிவான அறிவும்.

2) பிரச்சினைக்கு அடிநாதமான சகல முக்கிய விடயங்களும் நேர்மையாக அடையாளம் காணப்பட்டு அவற்றிற்கு ஒட்டுமொத்தமானதொரு நியாயமான தீர்வைக் காண்பதே இது பற்றிய எந்தச் செயற்திட்டத் தினதும் அரசியல் நோக்காக இருத்தல் வேண்டும்.

3) எல்லாவற்றிற்கும் மேலாக, நியாயமானதொரு அரசியற் தீர்வினைக் கொண்டு பிரிவினைவாதிகளின் முக்கியத்துவத்தை குறைப்பதன் மூலம், அவர்களை ஒதுக்குவதற்கும், சிங்கள வாக்காளரின் மொத்த எண்ணிக் கையில் ஏழு சதவீதத்திற்கும் குறைவாகவே ஆதரவைக் கொண்டி ருக்கும் சிங்கள இனவாதிகளை அலட்சியப்படுத்துவதற்கும், பிரதான மான தலைவர்களுக்குத் தீர்மானகரமான தன்மையும், மனத்திண்மையும் வேண்டும்.

"இப்பொழுது மக்களுக்கு வேண்டியதெல்லாம் சமாதானந்தான், எனவே ஓர் அரசியற் தீர்வு பற்றி இப்பொழுது பேச்சுக்களை முன்னெடுப்பதில் அதிக அர்த்தம் இல்லை" என்று விவாதிக்கும் ஒரு பகுதியினரும் அரசியல் விமர்சகர்களிடையே இருக்கின்றனர். மக்கள் பெரிய அளவிலான கஷ்டங்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதால் முதலில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான வழியே, ஆதலினால், ஓர் அரசியற் தீர்வுக்கான செயல்முறைகளை வலியுறுத்துவதும் அவற்றில் காலத்தை விரயம் செய்வதுவும் பொருத்தம் அற்றவை என்பதே அவர்கள் தமது கருத்துக்கு கூறும் நியாயமாக உள்ளது.

போரிடும் சாரருக்கு இடையிலான யுத்த நிறுத்தம், இரு தரப்பினரும் அவர்களது நிலைகளைப் பலப்படுத்திப் போரை மேலும் உக்கிரமாக்குவதற்கு மாத்திரமே வழி வகுத்தது என்பதுதான் கடந்தகால அனுபவங்கள் காட்டும் உண்மையாகும். மக்களின் அடிப்படை அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் ஓர் அரசியற் தீர்வு மூலம் மட்டும்தான் நிரந்தரமான சமாதானத்தை எய்த முடியும். இவ்விடயத்தில் தோல்வி அடைவதானது, பிரிவினைவாதிகளையும் இரு தரப்பிலுமுள்ள இனவாதத் தீவிரவாதிகளையும் பலப்படுத்தவும் செல்வாக்குள்ளவர்களாக ஆக்கவுமே உதவும்.

புலிகள் அமைப்பினின் இராணுவபலமோ அன்றி பயங்கரவாத வன்முறையை தொடர்ந்து மேற்கொள்ளுவதற்கான அதனது வல்லமையோ, இனப்பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வுக்கு வேண்டிய செய்முறைகளை முன்னெடுத்துச் செல்லாது, மாறாக, அவை மேன்மேலும் அளப்பரிய அழிவுகளையும் உயிர் இழப்புகளையுமே ஏற்படுத்தும் என்ற நிலைப்பாட்டை, கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தொடர்ச்சியாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் கூறி வருகின்றமை அனைவரும் அறிந்ததே.

இனப்பிரச்சினையின் ஆரம்பம் புலி அமைப்பினரின் பயங்கரவாதம் அல்ல என்ற உண்மையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அரசியலமைப்பு ஏற்பாடுகளில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டமை, அரசாங்க நிறுவன அமைப்புகளில் இனரீதியாக அன்னியப்படுத்தப்பட்டு உதாசீனப்படுத்தப்பட்டமை, இனரீதியான பாதுகாப்பற்ற உணர்வு ஆகியவையே காரணங்கள். இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்திட்டங்களில் காத்திரமான பங்கினை உறுதிப்படுத்துவதற்கு அரசியல் யாப்புரீதியாகவும் நிர்வாகரீதியாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்று கோருவதற்கு தமிழ் பேசும் மக்களை படிப்படியாக தள்ளிவிட்டன.

நியாயமானதோர் அரசியல் உருவமைப்பு மேற்கொள்ளப்பட்டு அது அரசியல்யாப்பில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் ஈ.பி.ஆர்.எல்.எவ் திடமான நம்பிக்கை கொண்டுள்ளது. அவ் ஏற்பாட்டைத் தொடர்ந்து தேவையான நிறுவன அடித்தளங்களும், நிர்வாக நடவடிக்கைகளும் ஏற்படுத்தப்படல் வேண்டும் எனக் கூறுகிறது. ஓர் ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அரசியல்யாப்பு மறுசீரமைப்பின் மூலம் இனப் பிரச்னைக்குத் தீவு காண்பதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்முறைகளிலும் முழுமையாகப் பங்காற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துவருகின்றது. 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை சமாதான உடன்பாட்டின் மூலம் உருவான வடக்கு-கிழக்கு மாகாண சபையில் நாம் பங்கேற்றமையானது, இந்த இலக்கை எய்துவதற்கான எமது முதல் முயற்சியாகும். ஆனால் துரதிருஷ்டவசமாக, பிரேமதாசா அரசாங்கத்திற்கும் பிரபாகரனின் புலிகள் அமைப்புக்கும் இடையே ஏற்பட்ட கூட்டினால் எமது முயற்சியின் பலன்கள் அனைத்தும் சிரழிக்கப்பட்டுவிட்டன

கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட அனைத்துக்கட்சி பேச்சுவார்த்தைகளிலும் ஆலோசனை வழிமுறைகளிலும் நாம் தீவிரமாகப் பங்குபற்றினோம். மங்கள முனசிங்கா யோசனைகளில் உள்ளடக்கப்பட்டவற்றை பற்றிய எமது அபிப்பிராயங்களையும், அதிலிருந்த குறைபாடுகளையும் தெளிவாகவே தெரிவித்திருந்தோம்.

ஓர் அரசியல் தீர்விற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காவினால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளுக்கு நாம் ஆதரவளித்தோம். அதேவேளை, அவரால் சமர்ப்பிக்கப்பட்ட நகல் சம்பந்தமாக எமது எண்ணங்களையும் மாற்று அபிப்பிராயங்களையும் எடுத்துரைத்தோம். ஆனால், பின்னர் அரசாங்கமும்-அத்துடன் ஓரளவிற்கு சர்வதேச சமூகத்தினரும் புலி அமைப்பினரை தாஜா பண்ணுவதன் மூலமே சமாதானத்தை அடைய முயற்சித்தல் என்ற வகையிலான தவறான அணுகுமுறைக்குள் தம்மை முடக்கிக் கொண்டதாலேயே அந்த முயற்சிகள் ஒரு கட்டத்துக்குமேல் போகமுடியாமல் ஸ்தம்பித்துவிட்டன. சிங்கள தீவிர இனவாதி களினதும், புலி அமைப்பினரினதும் இணக்கமின்மையைச் சாக்காகப் பயன்படுத்தி அரசியல்யாப்பில் எந்த மாற்றங்களும் ஏற்படுத்தாமல் விட்டனர்.

ஓர் அரசியற் தீர்வின் வழிமுறைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுவதில் நாம் முழுமையாகப் பங்காற்றுவது என்ற எங்களது தொடர்ச்சியான அணுகுமுறைக்கு இசைவாகவும், நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சி களினதும் குழுவொன்றினை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்து மேற்கொண்டுள்ள முயற்சிக்கு நாம் வழங்கும் பங்காகவும், இனப்பிரச்னையின் தீர்வுக்காக ஈ.பி.ஆர்.எல்.எவ் முன் மொழிந்துள்ள விபரங்கள் அனைத்துக்கட்சிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய பாராளுமன்றத்தில் ஈபிஆர்எல்எவ் பிரதிநிதித்துவம் வகிக்க முடியாது போனது துரதிருஷ்டவசமானதே. எனினும், பாராளுமன்றத்தில் தற்போது பிரதி நிதித்துவம் வகிக்காத கட்சிகளையும் அரசியற் தீர்வுத் திட்டத்திற்கான தங்களுடைய முன்மொழிவுகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுத்தமைக்கு, அனைத்துக் கட்சி பிரதி நிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவிற்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூற விரும்புகிறோம்.

எமது முன்மொழிவுகளில் கீழ்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு, முக்கியமான அம்சங்களை வரையறுத்திருக்கிறோம்-

1. இனப்பிரச்னை விஸ்தரித்து கூர்மையடைவதற்கான அடிப்படைக் காரணங்களாவன-கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்பேசும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக பாரபட்சமாக நடாத்தப்பட்டமை, "இனச்சுத்திகரிப்பு" எனக் கூறுமள விற்கு தமிழருக்கு எதிராக மீண்டும் மீண்டும் கட்டவிழ்த்து விடப்பட்ட கலவரங்கள், தமிழர்கள் காலாகாலமாக வாழ்ந்து வரும் அவர்களது பாரம்பரிய வதிவிடங் களிலேயே அரசாங்க உதவிகளுடன் மேற்கொள்ளப்பட்ட சிங்களக்குடியேற்றங்

களால் தமிழர்கள் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டு பாதுகாப்பின்றி வாழ வேண்டி ஏற்பட்டமை, தமிழ்பேசும் மக்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையினர் என்பதால் அரச அதிகாரங்களிலும், கட்டுமானங்களிலும் செல்வாக்கெதுவுமில்லாதவர்களாக் கப்பட்டு அன்னியப்படுத்தப்பட்டமை, அரசபடைகளிலும், பொலிஸ் மற்றும் நிர்வாகக் கட்டுமானங்களிலும் தமிழர்களது பிரதிநிதித்துவம் ஏறத்தாழ பூஜ்யம் என்ற அளவிற்கு அல்லது அற்ப விகிதாசாரத்துக்கு குறைக்கப்பட்டமை.

2. புலி அமைப்பினர் கடந்த இருபது ஆண்டுகளாக தமிழர்களை ஆயிரக்கணக்கில் படுகொலை செய்து, மக்கள் மீதான பயங்கரவாதப் பிரயோகம் மூலம் முழுத் தமிழ்ச் சமுதாயத்தையுமே அரசியல் அடிமைகளாக்கி வைத்துள்ளது. அத்துடன், முஸ்லிம் மக்களைக் கொன்றும், அவர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து அவர்களை விரட்டியும், வடக்கு-கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள் மீதான இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. மேலும், அது வடக்கு-கிழக்கிலும் அடுத்துள்ள சிங்களமக்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டங்களிலும் அப்பாவி சிங்களமக்கள் மீது கண்மூடித்தனமான கொலைகளை அடுத்தடுத்து நடாத்தி வருகின்றது. புலிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் இனமுரண்பாடுகளை மேலும் சிக்கலாக்கிவிட்டன.

3. நாட்டின் அனைத்து ஜனநாயக சக்திகளின் ஒருமுகப்பட்ட செயற்பாடுகள் மூலமும், தமிழ்மக்களதும் முஸ்லிம் மக்களதும் பிரச்சினைக்கு நியாயமானதும் நீதியானது மான அரசியற் தீர்வை உருவாக்கி அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலமே, புலிகள் அமைப்பினது வன்முறை புரியும் ஆற்றல் படிப்படியாகக் குறைக்கப்பட்டு அதனது பயங்கரவாத சக்தியை முற்றாக இல்லாது ஒழித்திட முடியும். அதேவேளை பெரும்பான்மையோரின் அதிகாரத் துஷ்பிரயோகத்தினால் எழும் பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவதுவும் சமமான முக்கியத்துவம் கொண்ட தாகும். இவற்றின் சோகமான விளைவுகளை நாடு சந்தித்திருக்கிறது, இன்னமும் சந்தித்துக் கொண்டேயிருக்கின்றது. எனவே, மாகாண அரசமைப்பிலும் சரி, மத்திய அரசமைப்பிலும் சரி, எந்த குறிப்பிட்ட இனக் குழுமங்களும், சிறுபான்மை யினர் மீது மேலாதிக்கம் செலுத்துவதை தவிர்ப்பதற்கு வேண்டிய, நியாயமான அளவிற்கு தேவையான, பிரதிநிதித்துவத்துக்கும் அவற்றை சமாந்திரப்படுத்தும் நெறிமுறைகளுக்கும் உரிய அளவு இடமளிக்கப்பட வேண்டும்.

4. அதிகாரப்பகிர்வுக்கான அலகுகளைத் தீர்மானிக்கும் பொழுது, முஸ்லிம் மக்களது அச்சங்களைக் கருத்திற் கொண்டும், அவர்களது அரசியல் அபிலாஷைகளையும், திருப்திப்படுத்துவதற்கும் உரியதொரு விசேட அரசியல் அதிகார அமைப் பொன்றினை அளிப்பதற்குத் தெளிவான தீர்மானம் இருத்தல் வேண்டும். அத்துடன், கடந்த ஆறு தசாப்தங்களாக தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் மேற்கொள்ளப் பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால், தமிழர்களுக்கு அவர்களுடைய

பாரம்பரிய வாழ்விடங்களில் இழைக்கப்பட்ட பாதகங்களை நிவர்த்திப்பதற்கும், அவர்களை இனரீதியாக ஒற்றுமைப்படுத்தி, முடிந்தளவு தொடர்ச்சியான நிலப் பரப்பில் ஒரே மாகாண எல்லைக்குள் அவர்கள் பாதுகாப்பு உணர்வோடு தங்கள் வாழ்க்கையை நடாத்துவதற்கும், ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிலஎல்லைகள் மீள வரையறுக்கப்பட வேண்டும்.

5. மாகாண அரசுகளுக்கு சட்டவாக்கல் மற்றும் நிறைவேற்று அதிகாரங்கள் பங்கிடப்படும் போதும் வரையறுக்கப்படுகையிலும், கீழ்க்காணும் விடயங்களில் பகிரப்படும் விதமும், பங்கிடும் விகிதமும் மிகவும் தெளிவாகவும், அதி உயர்பட்ச மாகவும் இருத்தல் வேண்டும்.

i) அரச நிலங்கள், வனவளங்கள் அடங்கலாக நிலம் மற்றும் நில அபிவிருத்தி தொடர்பான விடயங்கள்,

ii) பொலிஸ் அமைப்பு, சட்டம் மற்றும் ஒழுங்குகளை நிலைநாட்டல்,

iii) கல்விக்கான கட்டுமானம், கல்வி அபிவிருத்தித் திட்டங்கள், கல்வி நிறுவனங்கள்.

iv) மாகாண அரச நிறுவனங்களில் மட்டுமல்லாது, மத்திய அரச நிறுவனங் களிலுமுள்ள ஆயுதப்படைகள், பொலிஸ் படைகள் மற்றும் அரச நிர்வாக அமைப்புகள் ஆகியவற்றில் சேவையாற்றுவோரின் எண்ணிக்கையை, சிறுபான்மை இனங்களின் சனத்தொகை விகிதாசாரங்களுக்கு குறையாத அளவுக்கு பேணுதல்.

v) வடக்கு-கிழக்கின் புனர்வாழ்வு, புனர்நிர்மாணத் திட்டங்களுக்கான நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்கான நிதிகள் தொடர்பான விடயங்கள்.

vi) விவசாயம், மீன்பிடி, தொழில், சுற்றுலா மற்றும் சேவைத் துறைகள் ஆகிய வற்றின் வளர்ச்சிக்கான நிறுவனங்கள் மற்றும் அவற்றுக்கான செயல் திட்டங்கள் தொடர்பான விடயங்கள்.

vii) மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவுப் பொருட்கள், உடை, உறையுள், உடல்நலன், மருத்துவ வசதிகள் ஆகியவற்றிற்கான நிறுவனங்கள் மற்றும் இவை தொடர்பான அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய விடயங்கள்.

viii) நகரப் பகுதிகள் மற்றும் அவற்றின் உள்ளகக் கட்டமைப்புகளினது புனர் நிர்மாணத்திற்கும், அபிவிருத்திக்குமான நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்கான செயல் திட்டங்கள் தொடர்பான விடயங்கள். மேலும் கிராமங்களினதும்,

நகராட்சி சபைகள், பிரதேச சபைகள், கிராமிய பஞ்சாயத்துக்கள் ஆகிய உள்ளாட்சி நிர்வாகங்கள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான விடயங்கள்.

ix) வீதிகள், போக்குவரத்து அமைப்புக்கள் மற்றும் தொடர்பு வசதிகள், அத்துடன் மின்சாரம், வாயுப் பொருட்கள், நீர் விநியோகம், தொலைத்தொடர்புகள் ஆகிய மனிதவள மற்றும் சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதவற்றினது அபிவிருத்திக்கான நிறுவனங்கள் மற்றும் செயல் திட்டங்கள் தொடர்பான விடயங்கள்.

x) மொழிகள், சமயங்கள், கலாச்சாரம் மற்றும் பாரம்பரிய பண்பாடுகள் சம்பந்தமான விடயங்களின் பாதுகாப்புக்கும், விருத்திக்குமான நிறுவனங்கள் மற்றும் செயல் திட்டங்கள் தொடர்பான விடயங்கள்.

இங்கு மேலே பட்டியலிடப்பட்டுள்ள விடயங்களில், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான (முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட தனி மாகாணம் உருவாக்கம் பெறுகையில் அதற்குமென), மாகாண அரசாங்கங்களின் செயற்பாடுகளில் மத்திய அரசாங்கத்தின் அனாவசிய தலையீடுகளைத் தவிர்க்கும் விதமாகவும், அதிகாரப்பகிர்விற்கான அரசியல் யாப்பின் பகுதிகள் எதிர்காலத்தில் திரிபுபடும் வியாக்கியானங்களுக்கு உட்படுத்த முடியாதவாறு தீர்மானகரமாகவும் தெளிவாகவும் வரையறுக்கப்படல் வேண்டும்.

6. தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள மாகாணத்திற்கு அளிக்கப்படும் அதிகாரப் பகிர்வின் கட்டமைப்பும், அதன் விகிதமும், இந்திய அரசியல் அமைப்பில் உள்ளது போன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார். அவரது கருத்துக்களின் உசிதங்களையும், அவற்றிற்காக அவர் தரும் வாதங்களையும் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

7. தீவிர சிங்கள இனவாதிகளின் மிகைப்படுத்தப்பட்ட அச்சங்களின்-கூச்சல்களின் காரணமாக, தெற்கு அரசியல் வட்டாரங்களில் ஒரு பகுதியினரிடம், சமஷ்டி (federal) அமைப்பு பற்றி ஒருவித மருட்சி நிலவுகிறது. அதே சமயம், அரசியல் யாப்பில் "ஒற்றைநிலை (unitary)" என்ற பதம் இருக்கும் வரை ஒரு தகுந்த பகிர்வு முறையைக் கொண்டு வர இயலாது என அரசியல்யாப்பு வல்லுனர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள். ஏனவே, புதிய அரசியல்யாப்பு உருவாக்கப்படுகையில், "ஒற்றைநிலை", "சமஷ்டி" என்ற இரு பதங்களுமே தவிர்க்கப்படலாம் என்ற பொதுவான கருத்தொற்றுமை தோன்றியிருக்கிறது. அதிகாரப் பகிர்வின் செயல் முறைகளில் முன்னேற்றம் அடைவதற்கும், சிங்கள மக்களின் அதிக

விகிதமான தலைவர்களின் ஆதரவைப் பெறுவதற்கும், இதனை ஓர் உகந்த தெரிவாக அங்கீகரித்தல் வேண்டும்.

8. அதிகாரப்பகிர்வுகள் அர்த்தமுள்ளவையாவதற்கு, மாகாண அரசாங்கங்கள் அவர்களது அரசியற் கடமைகள் பொறுப்புகள் சம்பந்தமான பெறுபேறுகளை சரிவர வழங்க வேண்டும். அதற்கு ஏதுவாக, மாகாண அரசுகள் போதியளவு வரி களையும் மற்றும் வருமானங்களையும் தாமாகவே திரட்டுவதற்கும், மத்திய அரசாங்கத்திலிருந்து போதியளவு நிதி வருவாய்களையும் நிதிமூலங்களையும் பெறுவதற்கும், ஏற்ற வகையாக அரசியல்யாப்பில் நிபந்தனைகள் - ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

9. இரண்டு அரச அமைப்புகளும் - மத்திய அரசமைப்பும், மாகாண அரசமைப்பும் ஒன்று மற்றதை - குறிப்பாக மத்திய ஆட்சியாளர்கள் மாகாண அரசாங்கங்களை ஆக்கிரமிப்பதை தவிர்க்குமாறும், இரண்டு அரசியல் அமைப்புகளும் ஒன்றுக் கொன்று முரண்படாது இலகுவாகவும், காத்திரமாகவும் செயலாற்ற உறுதி செய்யும் வகையிலும், இரு ஆட்சி அமைப்புக்களுக்கும் உரிய தனித்துவ அதிகாரங்கள், மேலாண்மைகள், செயற்பாடுகள், நிர்வாக அடிக்கட்டமைப்புகள் ஆகியன வரையறுக்கப்பட்டு, அவற்றிற்கான அரசியல்யாப்பு நிபந்தனைகளும் ஏற்பாடுகளும் உருவாக்கப்படல் வேண்டும்.

10. எந்தவொரு அதிகாரப் பகிர்வு முறைமாற்றமும் ஒரே பாய்ச்சலில் நடைபெற மாட்டாது என்பதே உலகளாவிய அனுபவம். எனவே, அரசியல் நாகரிக வளர்ச்சிக்கு இடமளித்து, சமூகங்களினதும் பொதுமக்களினதும் ஜனநாயக மயப்படுத்தலை ஆழமாக்குவதற்கு நெகிழ்வாக இருக்கக்கூடியதாக அரசியல் யாப்பு அமைய வேண்டும். அத்துடன், அரசியல்யாப்பு வளர்ச்சியானது, பல தசாப்தங்களாக உள் முரண்பாடுகளால் இழுத்துச் செல்லப்பட்டு இழப்புகளையும் அழிவுகளையுமே கண்ட மக்களுக்கு, விசுவாசத்தையும் நம்பிக்கையையும் உயர்த்த வல்லதாக இருத்தல் வேண்டும். சகல சமூகங்களிலுமுள்ள இன அடிப்படையிலான முரண்பாடுகளைத் தீர்க்கவும், எல்லா சமூகங்களையும் சேர்ந்த அனைத்து மக்களிடையே நம்பிக்கையையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்பவும், வெவ்வேறு சமூகத்தினரைச் சேர்ந்த அப்பாவி மக்களின் அறியாமையினால் ஏற்படும் அவர்களது மனஎழுச்சிகளை உபயோகித்து அவர்களைச் சுரண்டி, இனவெறி, குறுந்தேசியவாதம் ஆகியவற்றை அடிப்படை மூலதனமாக வைத்துச் செயற்படும் சக்திகளைத் தடுக்கவும், வல்லமையானதோர் அரசியற் கட்டமைப்பை ஸ்தாபிப்பதுதான், உண்மையாகவே நாட்டுப்பற்றும் ஐக்கிய உணர்வும் கொண்டுள்ள சகல சமூகங்களையும் சேர்ந்த இலங்கையின் அனைத்து தலைவர்களதும் உடனடியான - இன்றியமையாத கடமையாகும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது, சமூக அரசியல் சம்பந்தமான விடயங்களில், அப்போதைக்கு ஜனரஞ்சகமானது என்ற அடிப்படையிலோ அல்லது பிரபலமான போக்குகளோடு இணைந்து போனால்தான் நிலைக்கலாம் என்ற அடிப்படையிலோ அதனது நிலைப்பாடுகளை என்றுமே எடுத்ததில்லை. இந்த உண்மை, தாரதம்மியங்களைப் பகுத்துணர்ந்து பார்க்கவல்ல அரசியல் வரலாற்று அவதானிகளுக்கு நன்கு தெரியும் எப்போதும் நாம் சாதாரண மக்களின் உண்மையான நலன்களின் அடிப்படையிலேயே சகல விடயங்களையும் அணுகியும் விளித்தும், அரசியல் மற்றும் சமூக நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கருத்திற் கொண்டு உண்மைகளோடும், சரியானவற்றோடும், நியாயமானவைகளோடும், தயங்காமல் சார்ந்து நின்றும், தொடர்ச்சியாக செயற்பட்டும் வந்திருக்கின்றோம். இலங்கைவாழ் எல்லா சமூகங்களையும் ஒன்றுபடுத்தி, அனைத்து மக்களும் ஒரு நிரந்தர சமாதானத்தை நோக்கி முன்னேற, சமாதானமும் செழிப்பும் நிலவும் நாடாக இலங்கை அமைவதற்கு உதவும் வகையாக நாம் மேற்கொள்ளும் இன்னுமொரு சரித்திர முயற்சிதான் எம்மால் இங்கு சமர்ப்பிக்கப்படும் இந்த முன்மொழிவுகள் என நாம் கருதுகிறோம்.

சிங்கள மக்களது பிரதான தலைவர்களும், தமிழ் முஸ்லிம் இனத்தவர்களின் தலைமைத்துவமும், இந்தியா அடங்கலான சர்வதேச சமூகங்களும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதான ஓர் அரசியற் தீர்வுக்கான தீர்மானங்களை இறுதியாக்கி, அவற்றை அரசியல்யாப்பில் உள்ளடக்குவதுதான் இன்றைய அரசாங்கத்தின் முதன்மைக் கடமையாகும்.

நியாயங்கள்-சார்ந்த-மனச்சாட்சி கொண்ட .இலங்கையின் வெவ்வேறு சமூகங்களினது தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும், இன்றைய நாட்டினது அரசியல் நிலைமைகளையும், சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கருத்திற் கொண்டு, எமது இந்த முன்மொழிவுகளின் காரணகாரியங்களையும் நியாயங்களையும் பொருத்தப்பாடுகளையும் கவனமாகச் சீர்தூக்கி, செழிப்பானதும் பலமானதும் ஒற்றுமையானதுமான இலங்கையைக் கட்டியெழுப்பவும், நாட்டின் அனைத்து மக்களின் சுபீட்சத்திற்காகவும், ஏற்றமிகு வாழ்விற்காகவும், இவற்றினை முன்னெடுத்துச் செல்வார்கள் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நம்புகிறது.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா)**
மார்ச், 2007

# இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியற் தீர்வு

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) சமர்ப்பித்துள்ள முன்மொழிவுகள்

01. இலங்கையானது, "இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு" என ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

- 'இலங்கை ஐக்கிய ஜனநாயக குடியரசு', இந்நாட்டில் வாழும் பல்வேறு சமூகங்களினதும் அபிலாஷைகளை முழுவதாக உள்ளடக்கி, அவற்றைப் பேணிப்பாதுகாப்பதன் மூலமாக, நாட்டின் ஐக்கியத்தையும் இறைமையையும் மேம்படுத்துவதற்கு ஏதுவாக, சமஷ்டி, ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

- இக்குடியரசில், அனைத்து மாகாணங்களிலும் வாழும் குடிமக்களின் நியாயமான விருப்புக்களையும், அவர்களது அடிப்படை அபிலாஷைகளையும் கவனத்திற்கொண்டு, அவற்றை வளர்ப்பதற்கும், அம்மாகாணங்களில் உள்ள சகல சமூகங்களிடையேயும் சமாதானம், சமத்துவம், சகோரத்துவம் நிலவவும், அவர்களது உயிர், உடமைகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் இருக்கும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும், அரசியல் யாப்பில் வரையறுக்கப்பட்டவாறு, மாகாண அரசு அமைக்கப்பட வேண்டும்.

- இலங்கைக் குடியரசிலிருந்து, எந்தவொரு மாகாண அரசும் பிரிக்கப்படமுடியாதவாறும், அவை அனைத்தும் குடியரசின் மத்திய அரசுடன் ஒன்றிய அரசுகளாக இருப்பனவாகவும், தேசிய நலன்களைப் பாதுகாத்தல், நாட்டின் ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பேணுதல், சகல சமூகத்தினரதும் பொதுவான முன்னேற்றம் ஆகியவற்றில் ஒன்றுக்கொன்று பொருத்தமுடன் இயங்கும் வகையில் அதிகாரங்களையும், செயற்பாடுகளையும் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

- ஜனநாயகமானதும், சமஷ்டி முறையிலானதுமான அரசியல் கட்டமைப்பு, சட்டத்தின் ஆட்சி, மக்களது உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவது, சட்ட வாக்கல், நிறைவேற்று

அதிகாரங்கள் ஆகியவற்றை வரையறுத்து அளிப்பது, நாட்டின் மத்திய அரசையும் மாகாண அரசுகளையும் ஒழுங்குபடுத்துவது, ஒருங்கிணைப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய **அரசியல் யாப்பே நாட்டின் அதிஉயர் சட்டமாகும்.**

குறிப்பு:- அரசியல் யாப்பை உருவாக்குபவர்கள், மாகாண அரசுகளுக்கு உண்மையாகவே அதிகூடியபட்சமாக அதிகாரப் பகிர்வை அளிக்கும் அரசியல் அமைப்பிற்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கு அரசியல் யாப்பினை **'சமஷ்டி** ***(federal)'*** என்ற பதத்தால் வரையறுக்காவிட்டாலும், தற்போதைய அரசியல் யாப்பிலிருக்கும் **'ஒற்றைநிலை** ***(unitary)'*** **என்ற பதம் நீக்கப்பட வேண்டும்** என்பதே பெரும்பாலும் உள்ள இப்போதைய எதிர்பார்ப்பாகும்.

## 02. மத்திய அரசிலோ அன்றி மாகாண அரசுகளிலோ பெரும்பான்மை மேலாதிக்கம் இல்லாதிருத்தல்

a. எந்த சட்டவாக்க நிறுவனங்களிலும்- பராளுமன்றத்திலோ அன்றி மாகாண சட்டசபைகளிலோ- **ஓர் அரசியல் கட்சியோ அல்லது ஒரு தேசிய சமூகமோ 'மூன்றில் இரண்டு பெரும்பான்மை' அதிகாரம் மூலம், மேலாண்மை செலுத்த முடியாதவாறு சட்ட ஏற்பாடுகள் புதிய அரசியல் யாப்பில் செய்யப்படுதல் வேண்டும்.**

b. தொகுதிகளை மீள் வரையறை செய்தல் மூலமாகவோ, விசேடமான தொகுதிகளை ஒதுக்குதல் மூலமாகவோ அல்லது பல் அங்கத்தினர் தொகுதிகள் மூலமாகவோ, சிறுபான்மையான தேசிய சமூகங்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளது மொத்த எண்ணிக்கை, நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்கிற்குக் குறையாது இடம் பெறும் வகையில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

## 03. தேசிய சமூகங்களின் அவை - ஈரவை நாடாளுமன்ற முறை

இலங்கையில் நிலவும் அரசியல் சமூக உருவாக்கங்கள், நிலமைகள் காரணமாக, **அனைத்து தேசிய சமூகங்களிடையேயும் சமத்துவத்தைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும், நாட்டின் அரசோச்சும் எந்த ஸ்தாபனத்தினது சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகார நடவடிக்கைகள் எந்தவொரு சமூகத்தினரது அடிப்படை உரிமைகளுக்கோ, நலன்களுக்கோ பங்கம் விளைவிப்பதைத் தவிர்ப்பதற்கும், இரண்டாவது**

அவையை உள்ளடக்கும் ஈரவைகள் கொண்ட நாடாளுமன்ற முறையின் தேவையை, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட யாவருமே பெருமளவில் ஒப்புக்கொள்கின்றனர்.

இவ் இரண்டாவது அவையினை 'தேசிய சமூகங்களின் அவை' என அழைக்கலாம். இம்மன்றம் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்:

i. சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள், இந்திய வம்சாவளி தமிழர்கள் ஆகியோர் இலங்கையின் பிரதான தேசிய சமூகங்கள் ஆவர்.

ii. இந்த அவையைப் பிரதிநிதித்துவப்படுத்துவோரின் மொத்த எண்ணிக்கையில், 40 விழுக்காட்டுக்குக குறையாதவகை யில் சிறுபான்மை சமூகங்களினுடைய பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கை இருத்தல் வேண்டும்.

iii. இந்த அவையின் பிரதிநிதித்துவக் கட்டமைப்பானது, மாகாண சபைகள், பிரதேசசபைகள், தொழிற்சங்கங்கள், கல்வி மான்கள், தொழிலதிபர்கள், நிபுணர்கள், மேலும் தேசிய ரீதியான முக்கியத்துவம் பெற்றோரையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

iv. இந்த அவையானது, இவ்வாறான இரண்டாவது சபைக்கே உரிய பாரம்பரியமான நடவடிக்கைகளுடன், நாட்டில் வாழும் சகல தேசிய சமூகங்களினது அடிப்படை அபிலாஷைகளை யும், நலன்களையும் பாதுகாப்பதை அதன் பிரதான செயற்பாடாகவும் பொறுப்பாகவும் கொண்டிருத்தல் வேண்டும்.

v. உப ஜனாதிபதியே இந்த அவையின் தலைவராதல் வேண்டும். அல்லது மேன்மையானதோர் அரச உயர் பதவியில் பணி யாற்றும் - பணியாற்றிய அனுபவமும் மேன்மையான தகைமை களும் கொண்ட ஒருவரை ஜனாதிபதி நியமித்தல் வேண்டும்.

vi. பாராளுமன்றத்திலோ அல்லது மாநில சட்டசபை ஒன்றிலோ சமர்ப்பிக்கப்படும் ஒரு தீர்மானம் (பிரேரணை), ஒரு தேசிய சமூகத்தினரின் பிரதிநிதிகளில் 50 வீதத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்டோரால் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால், அந்தத் தீர்மானம் முதலில் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவாறு திருத் தங்கள் செய்யப்பட்டு இந்த அவையினால் ஏற்றுக் கொள்ளப் பட்டதன் பின்னரே அது நாடாளுமன்றத்தின் தீர்மானமாக வேண்டும்.

vii. சிறுபான்மை சமூகங்களின் அபிலாஷைகள், நலன்கள் சம்பந்தமாக அரசியல் யாப்பிலிருக்கும் முக்கிய ஏற்பாடுகளில் ஏதாவது திருத்தங்கள் செய்யப்பட வேண்டின் இந்த அவையின் பிரதிநிதித்துவத்திலும் மூன்றில் இரண்டு பங்கினரது அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

viii. இதேபோன்ற இரண்டாவது அவை ஒழுங்குகள், எந்தெந்த மாகாண அரசுகளில் தேவைப்படுகின்றனவோ, அங்கெல்லாம் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

## 04. குடியரசின் ஜனாதிபதியும், பிரதம அமைச்சரும்

i. மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தேர்வு முறை தொடரப்பட வேண்டும். எனினும், ஜனாதிபதியின் பிரத்தியேக நிறைவேற்று அதிகாரங்கள் அரசியல் யாப்பு மூலம் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ii. (1) தேசிய பாதுகாப்பு (2) மாகாண சபைகள் சம்பந்தமான விடயங்கள் (3) வெளிநாட்டு விவகாரங்கள் (4) மத்தியவங்கி, (5) தேசிய கருவூலம் ஆகியன தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதில், ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருப்பார். மற்றைய சகல துறைகளுக்குமான அமைச்சர்களை, பிரதமரின் பிரேரிப்பின் பிரகாரமே ஜனாதிபதி நியமிக்கவோ, விலக்கவோ முடியும்.

iii. மத்திய பொலிஸ் திணைக்களம், பிரதம அமைச்சரின் கீழேயே செயல்படவேண்டும்.

iv. தனது நேரடி அதிகாரத்திற்கு உட்பட்ட விடயங்களைத் தவிர மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மற்றைய விடயங்கள் மீது, பிரதம அமைச்சரினது அல்லது அமைச்சரவையினது ஆலோசனைகளின் பிரகாரந்தான் ஜனாதிபதி தனது நிறை வேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம்.

v. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பதிலளிப்பவராகவும், கணக்கு கள் காரணங்கள் காட்டுபவராகவும் இருத்தல் வேண்டும்.

vi. ஜனாதிபதியும், பிரதம அமைச்சரும், அமைச்சரவையும், மத்திய அமைச்சர்களின் சகல செயல்களுக்கும் ஒட்டுமொத்த பொதுப்பொறுப்பு உடையவர்களாவர்.

vii. வெளிநாடுகளுடன் ஏற்படுத்தப்படும் சகல ஒப்பந்தங்களும் இணக்கப்பாடுகளும், பாராளுமன்றத்தினால் ஒப்புதல்

அளிக்கப்பட்டதன் பின்னரே சட்டபூர்வமானதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

viii. அரசியல்யாப்பில் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டிருக்கும் காரணங்களுக்காகத் தவிர, பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானோரின் ஆதரவைக் கொண்டிருக்கும் வரை, நாடாளுமன்றத்துக்கு உரியதான காலத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவோ அல்லது மறு பொதுத்தேர்தலுக்கு உத்தர விடவோ முடியாது.

## 05. உப ஜனாதிபதி

i. உப ஜனாதிபதியானவர், ஜனாதிபதி சாராத தேசிய சமூகமொன்றினைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ii. ஜனாதிபதி வேட்பாளருடன் இணைந்து போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்படுவதன் மூலமாகவோ, அல்லது அரசியல்யாப்பின் பிரகாரம் சட்டவாக்க சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்களாலோ, உப ஜனாதிபதி தெரிவு செய்யப்படலாம். இரண்டாவது வழிமுறை பின்பற்றப்பட்டால், அதில், தேசியசிறுபான்மையினங்களின் பிரதிநிதித்துவத்திற்கு அதிக வலு அளிக்கப்பட வேண்டும்.

iii, உப ஜனாதிபதி, ‘தேசிய சமூகங்களின் அவை’ (நாடாளுமன்றத்தின் இரண்டாவது அவை)-யின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதோடு, ‘தேசிய திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு’-வினது தலைவராகவும் இருத்தல் வேண்டும்.

## 06. இன, மத சார்பற்ற அரசை நிறுவுதல்

இலங்கை பல்லின, பல்மத, பல்கலாச்சாரங்களைக் கொண்ட நாடு. நாட்டின் ஏனைய மதங்களிலும், மற்றைய நம்பிக்கை முறைமைகளிலும், ஒரு குறிப்பிட்ட மதம் மேலானதாக இலங்கையின் அரசியல்யாப்பு கருதக் கூடாது. சகல சமய சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கைக்கும் நல்லிணக்கத்திற்கும் வழிசமைப்பதற்கான ஒழுங்குகளை அரசியல்யாப்பு கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு மதப் பிரிவுடனும் எந்தவித சார்பற்றதாகவும், முழுமையாக நடுநிலைமையானதுமாக அரசாங்கம் இருப்பது அதன் உள்ளார்ந்த எண்ணங்களிலும் செயல்முறைகளிலும் வெளிப்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசின் கடமையானது வெவ்வேறு நம்பிக்கைகள் கொண்ட அனைவரது அடிப்படை நலன்களையும், அபிலாஷைகளையும் பராமரிப்பதாக அமைய லேண்டும்.

## 07. வடக்கு-கிழக்கு மாகாணம்

### 7a. மாகாணஅரசின் எல்லைப் பகுதிகள் (அதிகாரப் பகிர்வுக் கான அலகு)

ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தை தமிழ்மக்கள் கோருவதன் காரணம், தமது வாழ்வையும் சொத்துக்களை யும் பாதுகாப்பதற்கும், தம் அரசியல், பொருளாதார, சமூக இருப்பை பேணுதற்காகவுமே. நீண்ட காலமாக மேற் கொள்ளப்பட்ட இன பாரபட்சங்களினாலும், தொடர்ந்து இடம் பெறும் போரினாலும் ஏற்பட்ட துன்பங்களுமே தமிழர் களிடையே பாதுகாப்பற்ற உணர்வை அதிகப்படுத்தியுள்ளன. எங்களுடைய பார்வையில், தமிழர்களில் அதிக பெரும் பான்மையோரினது விருப்பும், வேட்கையும், ஒரு நிலையானதும் பாதுகாப்பானதுமான வாழ்வே. வடக்கு-கிழக்கு ஒருங்கிணப்பை மீள ஏற்படுத்துவதன் மூலமே தமிழ்ப் பேசும் மக்களுக்கு அரசியல் பொருளாதார மற்றும் சரீரரீதியான பாதுகாப்பை நிலைப்படுத்த முடியும்.. இதன் மூலமே ஒரு பலமான ஐக்கிய இலங்கை என்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களில் இலங்கையின் சகல மக்களும் சேர்ந்து செய லாற்ற வழியேற்படும்.

எனினும், வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லீம், மற்றும் சிங்கள மக்களிடையே இருக்கும் நியாயமான எதிர்பார்ப்புக்கள், அச்சம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அவை தொடர்பாக பின்வரும் வழிமுறைகளை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்மொழிகிறது- இது, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் மாகாண, மாவட்ட எல்லைகளில் சில மாற்றங் கள், அருகாமையில் அமைந்திருக்கும் அம்பாறை தேர்தல் பிரிவை ஊவா மாகாணத்துடன் இணைக்கும் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும். இவ்விடயத்தில், வெலி ஓயா திட்டம் சம்பந்தமான பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

### 7b. முஸ்லீம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த அரசியல் ஒழுங்குகள்

மத்திய அரசிலோ அல்லது மாகாண மட்டத்திலோ தங்களு டைய அபிலாஷைகளைப் பேணுவதற்கு அரசியல் அதிகாரப் பகிர்விற்கான இடைவெளி தங்களுக்கு இல்லாதிருக்கின்றது என்ற முஸ்லிம் சமூகத்தினரது கவலை நியாயமானதே.

மேலும், கடந்தகாலங்களில் எல்.ரி.ரி.ஈ.யினர் முஸ்லிம்கள் மீது மேற்கொண்டு வந்துள்ள கொடுமைகளும், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளும், அவர்களுடைய அச்சங்களுக்கான யதார்த்தங்களை உறுதிப்படுத்தியுள்ளன. இவற்றைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் மக்களைக் குறித்ததொரு விசேடமான நிலையாக நின்றுபிடிக்கக்கூடிய அரசியற் தீர்வொன்று இங்கு இன்றியமையாததாகியுள்ளது.

இதற்குரிய சாத்தியமான வடிவமைப்பானது, கிழக்கில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையினராக கணிசமாக செறிந்து வாழும் பகுதிகளை மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும். இது, சமூகங்களிடையே இருக்கும் பரஸ்பர சந்தேகங்கள் அச்சங்களைக் கருத்திற் கொள்வதோடு தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வழிமுறைகளேயன்றி, சில பகுதியினரால் கோரப்படுகின்ற வகையாக வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை அல்ல.

**முஸ்லீம் மக்களின் தெரிவிற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைக்கும் மாற்றுப் பிரேரணைகள்**

**வழிமுறை 1.**

அம்பாறை மாவட்டம், முஸ்லிம் மக்களுக்கான ஒரு புதிய மாகாண மாக, 'தென்-கிழக்கு மாகாணம்' என- மீள்வரையறை செய்யப்படு வதுடன், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களும், வட மாகாணமும் ஒருங்கிணைந்த தனியான வட-கிழக்கு மாகாணம், பின்வருவனவற்றையும் கருத்திற் கொண்டு அமைக்கப்படுதல் வேண்டும்.

i. இம் மாகாணத்தில் வதியும் சிங்கள மக்கள் தாம் சிறுபான்மை யினராகி விடுவார்கள் என்ற அச்சத்தை நீக்கும் முகமாக, அம்பாறை தேர்தல் தொகுதி, ஊவா மாகாணத்துடன் இணைவது குறித்து தீர்மானிக்கும் உரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

ii. தென்-கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச சபைப் பகுதிகள் குறித்து முஸ்லீம் தலைவர் கள் எவ்வாறான ஏற்பாடுகளை முன்மொழிவார்களோ, அவை புதிய வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் பெரும் பான்மையாக உள்ள பிரதேச சபைப் பகுதிகளிலும் ஏற் படுத்தப்பட வேண்டும்.

வழிமுறை 2

இத்தென்கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தோடு, வடக்கு-கிழக்கில் உள்ள தொடர்பற்ற முஸ்லிம் பகுதிகளான காத்தான்குடி, ஏறாவூர் நகரம், வாழைச்சேனை நகரம், கிண்ணியா, மூதூர், எருக்கலம்பிட்டி ஆகிய பிரதேச சபைகளின் பகுதிகள் நிர்வாக ரீதியாக இணைக்கப் படலாம். (இந்தியாவிலுள்ள பாண்டிச்சேரி அரசுக்குட்பட்ட பகுதிகளைப் போல்)

இங்ஙனமான வடிவமைப்பில், இப்படிப்பட்ட பரஸ்பர ஒழுங்குகளை, புதியவகையில் ஒருங்கிணைந்திருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணமும், குறிப்பிட்ட தென்-கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள பிரதேச சபைப் பகுதிகளுடன் கொண்டிருத்தல் வேண்டும்.

பின்வரும் தொடர்ச்சியற்ற சில தமிழ்ப் பிரதேச சபைகள் அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்-

1. கல்முனை வடக்கு, பாண்டிருப்பு, நற்பட்டிமுனை என்பன அடங்கிய ( தமிழ் ) பிரதேச சபை.
2. காரைதீவு பிரதேச சபை
3. ஆலையடிவேம்பு பிரதேச சபை
4. தம்பிலுவில் - திருக்கோவில் பிரதேச சபை

வழிமுறை 3.

முழுமையாக இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குள் ஒரு முஸ்லிம் சபையினை உருவாக்கி, அதற்கு அவசியமான குறிப்பிட்ட துறைகளில் அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கி, அச்சபை அவ்வதிகாரங்களை முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச சபைப் பகுதிகளில் செலுத்த வகை செய்தல்.

இங்கு மேலே பட்டியலிடப்பட்டுள்ள வழிமுறைகளில் எது உகந்த தெனத் தீர்மானிக்கும் உரிமை வடக்கு- கிழக்கிலுள்ள முஸ்லீம் மக்களுக்கும், அதன் சமூக- அரசியற் தலைவர்களுக்குமே உரிய தாகும்.

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர்ச்சியற்ற பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட நெறி முறைகளுக்கான பரஸ்பர ஒழுங்குகளின் விபரங்களை, தமிழ்த் தலைவர்களும், முஸ்லீம் தலைவர்களும் பேச்சு வார்த்தைகள் மூலம் வகுத்துக் கொள்ள வேண்டும். மற்றைய சமூகத்தின் பிரதேசத்திற்குள் அடங்கும் இன்னொரு சமூகத்தின் விவசாயநிலங்கள் பற்றிய ஒழுங்குகள் பற்றியும் இப்பேச்சுவார்த்தைகள் மூலம் நெறிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

தேசிய சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை ஜனநாயக அபிலாஷைகளையும் நலன்களையும் பேணும் முகமாக, மாகாணங்களின் எல்லைகள் மீள் வரையறுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

## 7c. நிலப்பரப்புகளை மீள் வரைதல்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக மக்கள் கருத்துக்கணிப்பொன்றை வைப்பதற்கான முயற்சி யானது, பல்வேறு சமூகங்களிடையே பிரிவையும் பகைமை யையும் மேலும் ஆழமாக்கி விஸ்தரிக்கும் என்பதில் சந்தேக மில்லை. இத்தகைய கருத்துக்கணிப்பு பல பக்கங்களிலும் இருக்கும் தீவிர இனவாதசக்திகள் பதட்டங்களையும் அச்சங்களையும் கிளறிவிடுவதற்கே உதவும்.

மாகாண எல்லைகள், முன்னைய காலனித்துவ ஆட்சி யாளர்களால் நிர்வாக வசதிக்காக வரையறுக்கப்பட்ட பூகோளப் பகுதிகளேயாதலால் அவற்றில் புனிதம் எதுவுமில்லை. இந்த மாகாண எல்லைகளுக்கு அரசியல் அந்தஸ்து அளிக்கப் பட்டதே 1987ல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தின் மூலந்தான்.

1957ம் ஆண்டின் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ன் டட்லி-செல்வா ஒப்பந்தமும், அரச உதவிகளுடன் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களால் உருவாகிய இனங்களுக்கிடையேயான பதட்டங்களைத் தணிப்பதற்காகக் கருதப்பட்டவை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ் ஒப்பந்தங்கள் அமுலாக்கப்பட்டிருப்பின், வடக்கு-கிழக்கைப் பிரிப்பதா அல்லது இணைப்பதா என்ற கேள்வியே எழுந்திருக்காது. வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கையானது, அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் பாதகமான விளைவுகளைச் சமன் செய்வதற்காக எழுந்த ஒன்றே.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, 1970-களிலிருந்து அரசினால் செயற்படுத்தப்பட்ட குடியேற்றங்களை கலைத்து விடுவதாக திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்காவும் 1988ம் ஆண்டில் தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**7d. அம்பாறை தேர்தல் பிரிவை அடுத்துள்ள மாகாணத்துடன் சேர்த்தல்**

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை தேர்தல் பிரிவைத் தனியாக்கி, அதனது பொலீஸ் நிர்வாகம், நீதிமன்ற நிர்வாகம் ஆகியவற்றை, தற்போது கண்காணித்து வரும் ஊவா மாகாணத்துடன் இணைத்துவிடலாம் என்ற யோசனையை, ஈ.பி.ஆர்.எல்.எவ். இங்கே முன்வைக்கின்றது.

அம்பாறைத் தொகுதியின் சிங்களப் பெரும்பான்மையானது சமூகங்களிடையே பதட்டங்களை சிருஷ்டிப்பதற்கும், தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் அடிப்படை அரசியல் இருப்பை நலிவாக்குவதற்கும், கருவிகளாக உபயோகிக்கப்படுவதனாலேயே மேற்குறிப்பிட்ட கோரிக்கை எழுகின்றது. மேலும் அம்பாறை தேர்தல் பிரிவிலுள்ள சனத்தொகையில் மிகப்பெரும்பான்மையானோர், அதே மாவட்டத்திலுள்ள மற்றைய பகுதிகளின் இனங்களோடு ஓர் அர்த்தமுள்ள சமூக, அரசியல் உறவைக் கொண்டிருக்கவுமில்லை.

**7e. வெலிஓயா திட்டத்தினை மீள்வடிவமைத்தல்**

i. முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டத்திற்குள் உள்ளே அமைந்திருக்கும் வெலிஓயா திட்டத்தின் நிலப்பகுதி மீள்வடிவமைக்கப்பட்டு, அதன் மூலம், முன்னைய தமிழ்க் கிராமங்கள் 1984க்கு முன்னர் இருந்த நிலைமைக்கு மீளவும் கொண்டுவரப்படல் வேண்டும். பயன்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள அரச நிலங்கள் அந்தந்த மாவட்டங்களில் நிலவிய இனவிகிதாசாரப்படி, அந்தந்த மாவட்ட மக்களுக்கே முன்னுரிமை வழங்கி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

ii. இங்கு பயன்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ள அரச நிலங்களில் உண்மையாகவே 10 வருடங்களுக்கு முன்னரே நிரந்தரமாகக் குடியேறி, அதேவேளை தமது முன்னைய கிராமங்களில் நிலமோ, வீடோ இல்லாது இங்கு வதியும் சிங்கள விவசாயக் குடும்பங்கள் மட்டும்

தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் தொடர்ந்து சட்ட ரீதியாக வாழ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 7f. திருகோணமலை எல்லைக் கிராமங்களை மீள்வரை செய்தல்

இனங்களுக்கிடையேயான சனத்தொகை விகிதங்களை, அரச உதவியுடனான திட்டமிட்ட குடியேற்றங்கள், திருகோணமலை மாவட்டத்திலும் மிகப் பாரிய அளவில் பாதித்துள்ளன. 1950 களில் அல்லை-கந்தளாய் பகுதிகள் முழுவதுமே பெருமளவில் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டதுடன், 1976இல் திரு கோணமலை மாவட்டத்தில் சேருவாவில தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது. 1960களிலும், 1970களிலும் திரு கோணமலை நகரிலும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலும் சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

ஆனாலும், இப்பகுதிகளில் தற்போது வாழும் சிங்கள மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் எதுவித நடவடிக்கை களையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோர வில்லை. எனினும், அத்திட்டங்களினால் விளைந்த பாதகங் களினைக் கருத்திற் கொண்டு செயற்படுவதற்கான தீர்வுகளாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பின்வருவனவற்றை முன்மொழிகிறது-

திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களின் எல்லைப் பிரிவுகளில் உள்ள, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் மற்றும் கிராம சேவகர் பிரிவுகள் அடையாளம் காணப்பட்டு, அவை வட-மத்திய மாகாணத்துடன் இணைக்கப்படல் வேண்டும். அதே வேளையில், இப்படியான மீள்சரிசெய்தல், வவுனியா முதல் திருகோணமலை, திருகோணமலை முதல் மட்டக்களப்பு வரை யிலான ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கு மாகாண நிலப்பரப்பின் தொடர்ச்சிக்கு இடையூறாக இருக்காது என்பது நிச்சயப்படுத்தப் பட வேண்டும்.

## 7g. கிழக்கின் எதிர்காலம்

வடக்கு-கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பிற்காக ஆரம்பம் தொட்டு இருந்து வரும் முதலானதும் நியாயமானதுமான காரணமும் அதற்கான தற்போதைய தேவையும், அப்பிர தேசத்து மக்கள் யாவரும், குறிப்பாக தமிழ் மக்கள், தாங்கள் காலாகாலமாக வாழ்ந்துவரும் தமது சொந்த இருப்பிடங்களில்

சமாதானம், ஜனநாயகம், ஸ்திரம் ஆகியவை நிலவ வேண்டும் என்பதேயாகும். வெளியேற்றப்பட்ட சகல தமிழ் மக்களும் முஸ்லீம் மக்களும் மறுபடியும் அவரவரது பாரம்பரிய வாழ் விடங்களில் குடியேற்றப்பட்டு அவர்கள் தங்கள் சுயநம்பிக் கையை மீண்டும் பெற்றதன் பின்னர், கிழக்கின் தமிழ்-முஸ்லிம்-சிங்கள தலைவர்கள் ஒருங்கிணைந்து கலந்தாலோசித்து கிழக்கின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்கலாம்.

**7h. ஒருங்கிணைந்த வடக்கு-கிழக்கே**

**இலங்கையின் ஐக்கியத்தை வலுவாக்கும்.**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் ஏற்பாடுகள், ஓர் ஐக்கிய இலங்கைக்குள் சிறுபான்மையான தேசிய சமூகங்களின் பாதுகாப்பிற்கும், அவர்களுடைய நலன்களையும் அபிலாஷை களையும் பேணி வளர்ப்பதற்கும் அவசியம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டியது பிரதானமானதாகும். எனவே, தீர்வுகளை அணுகும் பொழுது, அவை புலிகள் பற்றிய மருட்சி நிலையின் அடிப்படையில் இருக்கக் கூடாது. அநேகரால் விரும்பப்படும் அரசியல் கட்டமைப்புக்கான தீர்வானது ஒரு தனிநாட்டை சிருஷ்டிக்க முயற்சிப்பவர்களிடம் கையளிக்கும் நோக்கிலான ஒன்றல்ல அல்லது வடக்கு-கிழக்கு வாழ் மக்களை புலிகளின் பயங்கரவாதத்திடம் கையளிக்கும் விடயமுமல்ல. அவ்வாறான எண்ணத்துடன் அணுகுவது ஒரு நியாயமான அரசியற் தீர்வை காணும் முயற்சியில் தவறு களையே உண்டாக்கும்.

பன்முகப்பட்ட அரசியல் வழிமுறைகளின் மூலம், மக்களின் பல்வேறு பகுதியினரதும் வெவ்வேறுபட்ட நலன்களை சமமாகத் திருப்திப்படுத்துவதுடன், நாட்டின் ஐக்கியத்தையும் இறைமை யையும் பேணி வளர்த்து, இலங்கையை ஒரு பல்லின மக்களின் ஐக்கிய தேசமாக உருவாக்குவதே. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தூர நோக்காகும். இவ்வண்ணமான ஓர் அரசியற் தீர்வானது, முரண் பாடுகளுக்கு எதிராக இயங்கி, யுத்தத்தை நலிவடையச் செய்து, சமாதானமும் ஜனநாயகமு மான சூழ்நிலையை நிலைநிறுத்தி, சகல சமூகத்தினரதும் நாடு முழுவதற்குமான சுபீட்சத்திற்கு வேண்டிய கட்டுமானங் களையும், பாரம்பரியங்களையும் கட்டி யெழுப்பல் வேண்டும். எந்தத் தீர்வும் எல்லாக் குழுவினரையும் ஒரே சமயத்தில் திருப்திப்படுத்த முடியாது. எனினும், நியாயமானதும் நீதியானது மான தீர்வொன்றினைக் கண்டு, அதனை நம்பிக்கையுடனும்

ஊக்கமுடனும் எல்லோரும் ஒருங்கிணைந்து செயலாற்றி ஸ்தாபிப்பதன் மூலந்தான், பல தரப்பிலும் இருக்கும் தீவிரவாத சக்திகளின் செயல்களுக்கு முட்டுக்கட்டை போட முடியும்.

சிங்கள மக்களின் நலன்களில் நேர்மையானதும் உண்மையானதுமான அக்கறையும், அதேவேளை தமிழ் மக்களுக்கு எதுவித பங்கமும் ஏற்படுவதை விரும்பாத சிங்களத் தலைவர்கள், இத்தகைய ஒழுங்குகளையே உசிதமாகக் கொள்வார்கள் என ஈ.பி.ஆர்.எல்.எவ் எதிர் பார்க்கின்றது. சிங்களமக்களின் தலைவர்கள், கடந்த காலத் தையும் சமகாலத்தையும் புரிந்துகொண்டு, இலங்கையினது சகல மக்களினதும் நலன்களுக்காக, விவேகத்துடனும் துணிவு டனும் உறுதியுடனும், நியாயமானதும், நீதியமாதுமான ஓர் அரசியற் தீர்வை அளிப்பார்கள் என்பதே தமிழ்மக்களது எதிர்பார்ப்பாகும்.

இலங்கையில் நிலவும் சமூக அரசியல் வளர்ச்சியின் யதார்த் தங்களையும், தமிழ்மக்களின் நிலைமைகளையும் புரிந்துகொள்ளும்படி, தமிழ்மக்களின் தலைவர்களையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வேண்டுகிறது. நாகரீகம், அறிவு, பொறுப்பு வாய்ந்த எந்த மனிதனுமே, இரத்த தாகம் கொண்ட யுத்த வெறியர்களுக்கு உதவக் கூடாது. சமாதானத்தையும் ஜன நாயகத்தையும் எட்டுவதற்கு, விட்டுக்கொடுப்புகள், இணக்கப் பாடு, கருத்தொற்றுமை ஆகியவற்றுடன் பரஸ்பர அபிலாஷை கள், மற்றவர்களுடைய அச்சங்கள் ஆகியவற்றையும் அங்கீகரிப்பது முக்கியமானதும் தவிர்க்க முடியாததுமாகும்.

## 08. மாகாண சட்டசபை

1) ஒவ்வொரு மாகாண சபையும் இரண்டு அவைகளை கொண்ட தாக இருக்கும்-

   i) **மாகாண சட்டசபை**

   ii) **தேசிய சமூகங்களின் மாகாண அவை**

2) பாராளுமன்றத்திற்கே உரியதாக சட்டவாக்க நிரல்களில் ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர, மற்றைய அனைத்து விடயங்கள் சம்பந்தமான சட்டங்கள், சாசனங்களை மாகாண சட்டசபையே உருவாக்கும். உடன்பாட்டு (Concurrent List) நிரலில் பட்டியலிடப் பட்ட விடயங்கள் தொடர்பான சட்டங்கள் மற்றும் சாசனங்களை யும் அவை தொடர்பான நாடாளுமன்றத்தின் சட்டங்களுக்கு

உடன்பாடான வகையில் மாகாண சட்ட சபைகள் உருவாக்கும்.

3) மாகாண சட்டசபைகள், நாடாளுமன்றத்திற்கோ அல்லது மத்திய அரசுக்கோ அடங்கிச் செயற்படும் நிறுவனங்களாகக் கொள்ளப்படக்கூடாது, நாட்டின் ஒட்டுமொத்தமான ஆட்சிக் கட்டமைப்பின் முக்கிய பகுதிகளாகவே அவை கருத்தப்படவும் நடாத்தப்படவும் வேண்டும்.

4) மாகாணத்தின் முதலமைச்சரின் எழுத்து மூலமான வேண்டுதலின் பேரிலேயே, ஆளுநர், மாகாண சட்ட சபையை கூட்டவோ, கலைக்கவோ, அல்லது ஒத்திப் போடவோ முடியும்.

## 09. ஆளுநர்

1) மாகாணத்தின் முதலமைச்சருடனும் எதிர்க்கட்சித் தலைவருடனுமான உடன்பாட்டின் பிரகாரம், ஐந்து வருடங்களுக்கு என ஜனாதிபதியினால் ஆளுநர் நியமிக்கப்படுவார். ஜனாதிபதியின் மாகாண அளவிலான பிரதிநிதியாகவே ஆளுநர் செயற்படுவார்.

2) சட்டங்களாலும் சாசனங்களாலும் குறிப்பிடப்பட்ட உத்தியோகப் பற்றற்ற பதவிகள் தவிர, வேறு அரசு நிறுவனங்களிலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ, ஊதியமோ இலாபமோ பெறும் பதவிகளை ஆளுநராக இருப்பவர் வகிக்கக் கூடாது. அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் ஒருவர் ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில், அவர் தனது உத்தியோகத்திலிருந்து நிரந்தரமாக ஓய்வுபெற்றவராகக் கருதப்படுவதுடன், பின்னர், அவர் மத்திய அரசினது அமைச்சர் ஸ்தானத்திற்கு குறைவான அரசாங்கப் பதவிகள் எதற்கும் மறு நியமனம் செய்யப்படக் கூடாது.

3) மாகாண சட்டசபை, மாகாண அரசாங்கம், மாகாண பொது நிர்வாகம், பொலீஸ் நிர்வாகம், நீதி நிர்வாகம் ஆகியவை அடங்கலான, மாகாண அரசு அமைப்பின் சம்பிரதாயத் தலைவராக ஆளுநர் இருப்பார்.

4) **ஆளுநர், மாகாண நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு சம்பிரதாயத் தலைவர் மாத்திரமே. மாகாண முதலமைச்சரினது அல்லது அமைச்சரவையினது ஆலோசனையின் பேரில் மட்டுமே அவர் நிறைவேற்று அதிகாரங்களை உபயோகிக்கலாம்.**

5) ஜனாதிபதியின் சார்பில் செயற்படும் ஆளுநர், மாகாணத்தின் அரசியல் யாப்புக் கண்காணிப்பாளர். எனவே, எந்த அலுவலக மும், எவரும் ஆளுநரின், ஜனாதிபதியுடனான தொடர்புகளில், குறுக்கிடவோ, அவை பற்றி கேள்விகள் எழுப்பவோ முடியாது.

6) **இடைக்கால கண்காணிப்பு அரசாங்கத்தின் உரு வாக்கம்**

முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம், மாகாண சட்டசபை ஆளுநரால் கலைக்கப்படும் பட்சத்தில், மறு தேர்தல் முடிந்து புதிய அரசாங்கம் உருவாகும் வரை **தொடர்ந்து பதவியிலிருக்கும்படி, முதலமைச்சரை ஆளுநர் கோர வேண்டும்.**

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம், பெரும்பான்மையை இழந்தும் வேறொரு மாற்றுக் கட்சிக்கு பெரும்பான்மை இல்லாததுமான நிலையில், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆலோசகர்களுடன் **இடைக்கால கண்காணிப்பு அரசாங் கத்தின் தலைவராக ஆளுநரே செயல்பட வேண்டும்**

7) ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஜனாதிபதி தனக்கு விரும்பிய, ஆனால் அந்த அரசாங்கத்தின் எந்த அங்கத்திலும் அப்பொழுது வேலை செய்து கொண்டிருப்பவர்களை உள்ளடக்காத, **வினைத் திறன்சார் ஆலோசனைக் குழு** ஒன்றினை ஆளுநர் ஆலோசகர்களாக நியமிப்பார்.

8) தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் பதவியில் இருக்கும் போது, ஜனாதிபதிக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கும் அதிகாரம் தவிர, ஆளுநருக்கு பிரத்தியேகமான தன்னிச்சையாகத் தீர்மானிக்கும் அதிகாரங்கள் எதுவும் கிடையாது.

9) தனது பதவிக்காலத்திலோ, பதவி முடிந்த ஐந்து ஆண்டு களுக்கு முன்னரோ, கட்சிசார் அரசியலிலோ அல்லது ஓர் அரசியற் கட்சியின் நடவடிக்கைகளிலோ ஆளுநர் ஈடுபடக் கூடாது.

10) ஓர் ஆளுநர் மீளவும் நியமிக்கப்படலாம். ஆனால், எவ்வித சந்தர்ப்பமாயினும், ஓர் ஆளுநரின் மொத்தப் பதவிக்காலம் பத்து வருடங்களுக்கு மேலாக அமையக் கூடாது.

10. மாகாண அரசாங்கம்

1) மாகாண சட்டசபைகள், சட்டவாக்க அதிகாரங்கள் கொண்ட அனைத்து விடயங்களிலும், மாகாண அரசாங்கங்கள் நிறைவேற்று அதிகார உரிமைகள் கொண்டிருக்கும்.

(குறிப்பு:- மத்திய அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரங்கள் நாடாளுமன்றத்தினால் மட்டுமே சட்டவாக்க அதிகாரங்கள் உடைய விடயங்களில் மட்டுமே இருக்கும். இது, அரசியல் யாப்பில் உடன்பாட்டு நிரல் என ஒன்று இருக்கும் பட்சத்தில், அந்த உடன்பாட்டு நிரலில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான சட்டவாக்க, நிறைவேற்று அதிகாரங்கள் பற்றிய குழப்பங்களையும், குளறுபடிகளையும் நீக்குவதற்கு அவசியமாகும். இந்த உடன்பாட்டு நிரலுக்கு 'இணை நிரல் அல்லது பொது நிரல்' என்ற வியாக்கியானத்தைக் கொடுப்பது, மாகாண அரசாங்கங்களை சிறுமைப்படுத்தவும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை மறைமுகமாகப் பெருக்குவதற்கும் வழிவகுக்கும்.

2) மாகாண ஆட்சியின் முதலமைச்சர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு, தனது சத்தியப்பிரமாணத்தை ஜனாதிபதி முன்னிலையிலேயே எடுத்துக் கொள்வார்.

3) ஆளுநர், அமைச்சரவையின் உறுப்பினர்களை முதலமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் நியமிப்பார் மற்றும் பதவி நீக்கவும் செய்வார்.

4) மாகாண முதலமைச்சரும் மந்திரி சபையும், மாகாண சட்டசபைக்குக் கூட்டுப் பொறுப்புள்ளவர்களாகவும், பதிலளிப்பவர்களாகவும், கணக்குகள் காரணங்கள் காட்டுபவர்களாகவும் செயலாற்றக் கடப்பாடு உடையவர்களாவர்.

5) மாகாண அரசாங்கத்தின் முதலமைச்சர், மாகாண சட்டசபையில் பெரும்பான்மையான ஆதரவைக் கொண்டிருக்கும் வரை தொடர்ந்து பதவி வகிப்பார். அவரது பெரும்பான்மை ஆதரவு பற்றிய விவகாரம் சட்டமன்றத்தில் வாக்களிப்பின் மூலம் மட்டுமே நிர்ணயிக்கப்படலாம்.

11. மாகாணத்தில் ஜனாதிபதி ஆட்சியை பிரகடனப்படுத்துதல், சட்டசபையை இடைநிறுத்துதல், கலைத்தல் மற்றும் மாகாண ஆட்சியை நீக்குதல்.

- மாகாண முதலமைச்சரும் அமைச்சரவையும் ஒட்டுமொத்த மாகவோ அல்லது மாகாண சட்டசபையோ, குடியரசின் ஒருமைப்பாட்டிற்கும் இறைமைக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் அதிகாரத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என, அரசியல் யாப்பில் குறித்துரைக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் ஜனாதிபதி திட்டவட்டமாகக் காட்டமுடிகின்ற பட்சத்தில், அரசியல் யாப்பில் உள்ளடக்கிய பிரகாரம், **மத்திய அமைச்சரவையின் உடன்பாட்டுடன், தனது அதிகாரத்தைப் பிரயோகித்து, மாகாண அரசாங்கத்தையோ அல்லது மாகாண சட்டசபையையோ அல்லது இரண்டையுமே ஜனாதிபதி இடைநிறுத்தி வைக்கலாம். இத்தகைய பிரகடனம், 14 நாட்களுக்குள் ஜனாதிபதியால், அவரால் விசேடமாக அமைக்கப்பட்டதொரு உயர் நீதிச் சபையினரால்,** மாகாண அரசாங்கம் நீக்கப்பட வேண்டுமா, அல்லது மாகாண சட்டசபை கலைக்கப்பட வேண்டுமா அல்லது இரண்டுமே செய்யப்பட வேண்டுமா என்பது பற்றித் தீர்ப்பளிக்கும் படி கோரப்பட வேண்டும். அதன் பின்னர்தான், **நீக்குதல், கலைத்தல் பற்றிய முடிவை, பாராளுமன்றத்தில் ஐந்தில் மூன்று பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவு கொண்ட விசேட தீர்மானம்** ஒன்றின் மூலம் உறுதி யாக்கியே நிறைவேற்றுதல் வேண்டும்.

- இவ்வாறான இடைநிறுத்தல் பிரகடனம், ஜனாதிபதியினாலோ, மேல் நீதிச்சபையினாலோ, நாடாளுமன்றத்தினாலோ ரத்துச் செய்யப்பட்டால், தெரிவு செய்யப்பட்ட **மாகாண சட்டசபையும் மாகாண அரசாங்கமும் அவற்றிற்கு இன்னமும் உரித்தாக உள்ள காலம் (இடைநிறுத்தப்பட்ட காலம் உள்ளடக்கப்படாத) வரை தொடர்ந்து செயற்பட அனுமதிக்கப்பட வேண்டும்.**

- ஆளுநர் ஆட்சிப் பிரகடனம் 6 மாதங்களுக்கு மேல் நீடிக்கப் படுவதானால், அதற்கு, ஒவ்வொரு தடவையும், **பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும்.**

## 12. மாகாண அரசாங்க முறைமையைப் பேணிக்காத்தல்

- முதல் வடக்கு-கிழக்கு மாகாண சட்டசபை 1990ல் கலைக்கப் பட்ட பின்னர், அதன் அதிகாரங்களும் செயற்பாடுகளும், முறைமையற்றவகையில் கொழும்பிற்கு வாபஸ் பெறப்பட்டன. மத்திய அமைச்சர்களும் அரச அதிகாரிகளும் அவற்றை அப

கரித்துக்கொண்டு, கொழும்பிலிருந்து நேரடியாக செயற் படுத்தினர். இந்த நடவடிக்கைகளும், திரிபுபடுத்தியவியாக்கி யானங்களும், மாகாண சட்டசபை கலைக்கப்பட்டதும், சம்பிர தாய ஆளுநரையும், அதிகாரம் எதுவுமற்ற அதிகாரிகளையும் விட்டு வைத்ததே தவிர, மாகாண அரசை நடைமுறையில் செயலிழக்க வைத்துவிட்டது. மேலும், இவ்வாறான நடை முறைகள், பொதுச் சேவையிலுள்ள அரசாங்க அதிகாரிகள் மாகாண கட்டுமான அமைப்பின் கீழ் செயலாற்றும் பொழுது, அவர்களின் பதவி மற்றும் அந்தஸ்துகளுக்கு ஊறு ஏற்படுத்தும் வகையில் அவர்களை சிரமங்களுக்கு உட்படுத்தி விடுகின்றது. பல்வேறு நெருக்கடிகள், சாதகமற்ற சூழ்நிலைமை களுக்கு மத்தியிலும் முதலாவது வடக்கு-கிழக்கு மாகாண ஆட்சி நிறுவப்பட்டபோது, மிகவும் ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த தமிழ் பொதுச்சேவை அரசு அதிகாரிகள் பலர் அத னோடு இணைந்து, துணிச்சலுடனும், ஆர்வத்துடனும் செயற் பட்டார்கள்.

- முன்னர் இருந்தது போலவே ஒரு மாகாண அரசை கட்டி யெழுப்புவதற்கான முயற்சிகள் மீண்டும் மேற்கொள்ளப் படும்போது, தகுந்த நிர்வாக அதிகாரிகளை இக்கட்டமைப்பை நம்பிச் சேவையாற்ற வைப்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். ஆகையால், மூத்த பொது சேவை ஊழியர்கள் மாகாண அரசின் நிர்வாகக் கட்டுமானத் தில் சேவையாற்றுவதில் அவர்களுக்குள்ள தயக்கங்களையும் அச்சங்களையும் நீக்கும் முகமாக, அவர்களுக்கு **அரசியல் யாப்பில் வெளிப்படையான உத்தரவாதங்களும், மத்திய அரசாங்கத்தின் நிர்வாகப் பிரகடனங்களும் உறுதிகளும் அளிக்கப்படல் வேண்டும்.**

- மாநில சட்டமன்றங்களைக் கலைப்பதற்கும் மாநில அரசாங்கங்களை நீக்குவதற்கும், இந்திய அரசியல் யாப்பு இப்படித்தான் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது என வாதிடுபவர்கள், இலங்கையின் மத்திய அரசு கடந்த 17 வருடங் களாக, இந்திய அரசு முறைமையை வடக்கு கிழக்கு மாகாண சபை சம்பந்தப்பட்ட வரையில் கடைப்பிடிக்கவில்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில், **முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவினால் உருவாக் கப்பட்ட பிழையான நிர்வாக மரபை மாற்றியமைப்பதற்கு வலுவான முன்னெடுப்புக்கள் அவசியமாகும்.**

- எனவே, எதிர்காலத்திற்கான அரசியல் யாப்பு சம்பந்தப்பட்ட ஒழுங்குகள், வெளிப்படையானதாகவும், தெளிவானதாகவும்,

நேரடியானதாகவும், வேறுவிதமாக திரிபுபடுத்தும் வியாக்கியானங்கள் செய்யப்பட முடியாதனவாகவும் அமைக்கப்படுதல் வேண்டும்.

- அரசியல்யாப்பு விதிகளின் பிரகாரம், மாகாண சட்டசபை இடைநிறுத்தப்படவோ கலைக்கப்படவோ, மாகாண அரசாங்கம் இடைநிறுத்தப்படவோ நீக்கப்படவோ வகையிருக்கலாம். **ஆனால், எத்தருணத்திலும், ஒரு மாகாண அரசமைப்பின் கட்டுமானமும், அதிகாரங்களும் அரசியல் யாப்பினால் பராமரிக்கப்படும் வரை, இடைநிறுத்தப்படவோ சீர்குலைக்கப்படவோ கூடாது.**

- எந்தவொரு மத்திய அமைச்சரும், மாகாண ஆட்சிக்குப் பகிரப்பட்ட விடயங்களின் மீது, முழுமையாகவோ பகுதியாகவோ, தனது நிறைவேற்று அதிகாரங்களையோ செயல்களையோ பிரயோகித்தால், அது மாகாண அரசின் கட்டுமானத்தைப் பேணிக்காக்கும் அரசியல் யாப்பிற்கு முரணானது எனக் கொள்ளல் வேண்டும். அக்காலப் பகுதியில், மாகாண சட்டசபைக்கு பகிரப்பட்ட சட்டவாக்க அதிகாரங்கள் மட்டுமே நாடாளுமன்றத்தால் பிரயோகிக்கப்படும்.

- **அனைத்து மாகாண அரச அமைப்பினதும் கட்டுமானங்களைப் பாதுகாப்பதும், அரசியல்யாப்பு விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்தின் அரசாங்க நிர்வாகமும் தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதும், மத்திய அரசின் கடமையும் பொறுப்பும் ஆகும்.** உண்மையில், மாகாண அரசமைப்பின் கட்டுமானத்தை, அது முகம் கொடுக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், அரசியல்யாப்பின் பிரகாரம் தனது கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கும்,*மத்திய அரசு அதனை வலுவாக்க வேண்டும். எந்தக் காரணங்களுக்காகவும் அது பலவீனப்படுத்தப்பட்டால், அச்செய்கை, மாகாண அரசிலிருந்து மட்டுமல்ல முழு தேசிய கட்டமைப்பில் இருந்தும் அந்த மாகாணத்தின் மக்களை அந்நியப்படுத்தியும் தனிமைப்படுத்தியும் விடும்.

## 13. மாகாண அரசின் பொது நிர்வாகம்.

1) மாகாண நிர்வாகத்தின் தேசிய நிர்வாகசேவை அலுவலர்களிலிருந்து, **பிரதமசெயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்கள், சபைகளின் இயக்குநர்கள், மாவட்டங்களின் நிர்வாகத் தலைவர்கள்** ஆகி

யோரை, மாநில முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரமே ஆளுநர் நியமிப்பார்.

2) நிபுணத்துவ அல்லது தொழில் நுட்பத்துறைகளுக்கான திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகளின் நியமனம், மாகாணத்தின் அந்தந்த துறைகளைச் சார்ந் தவர்களிலிருந்து, அமைச்சரவையின் தீர்மானத்தின் படியும், மாகாண சட்டசபையினால் ஆக்கப்பட்ட சட்டப் பிரமாணங்களின் பிரகாரமும் மேற்கொள்ளப்படும்.

3) மாகாண அரசின் பொது நிர்வாகத்திற்கான ஏனைய அனைத்து நியமனங்களும், மாகாண சட்டசபையின் சட்டப்பிரமாணங் களுக்கு இசைவாக, மாகாண அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

4) பொதுச் சேவை ஆணைக்குழுவும், மாகாண பொலிஸ் சேவை ஆணைக்குழுவும், மாகாண அரசசேவையாளர்கள் சம்பந்தமான ஆட்சேர்ப்பு, நியமனம், ஒழுங்கமைப்பு, பதவி உயர்வு ஆகிய இன்னோரன்ன விடயங்களில், மாகாண அர சாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும், அதற்குக் கீழ்ப்படிந்த, அங்கங்களாக செயற்படும்.

**14. மாகாணத்தின் நீதித்துறை நிர்வாகம்**

1) பிரதேச பிரிவுகளுக்கான நீதிமன்றங்களை, மாகாண சட்ட சபையின் சட்டப்பிரமாணங்களின் பிரகாரம், மாகாண அர சாங்கம் ஸ்தாபித்து நிர்வகிக்கும்.

2) ஒவ்வொரு மாகாண அரசும் ஒரு மாகாண நீதிச்சேவை ஆணைக்குழுவைக் கொண்டிருக்கும். இவ் ஆணைக்குழு, மாகாணத்தின் நீதித்துறைநிர்வாகம் தொடர்பான விடயங்களில் மாகாண அரசாங்கம் கலந்தாலோசிக்கவும், அதற்கு ஆலோ சனை வழங்குவதற்குமாக செயற்படும்.

3) பிரதேசப் பிரிவுக்கான நீதிமன்றங்களின் நீதிபதிகள், மாகாண நீதிச்சேவை ஆணைக்குழுவின் சிபாரிசின் பிரகாரம், ஆளுநரால் நியமிக்கப்படுவர்.

4) மாகாண நீதிச்சேவை ஆணைக்குழு, அமைச்சரவையின் ஆலோசனையின் பிரகாரம், ஆளுநரால் நியமிக்கப்படும்.

5) உள்ளூர் மட்டத்திலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வ தற்கு, ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவும், மாகாண சட்டசபையின்

விதிகளின் பிரகாரம், மாகாண நீதிச்சேவை ஆணைக் குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டும், நெறிப்படுத்தப்பட்டும் இயங்கு கின்றதொரு 'கிராமிய நீதிச்சபை'யைக் கொண்டிருக்கும்.

6) மாகாணத்தில் சமாதான நீதவான்களை, மாகாண நீதிச் சேவை ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன், ஆளுநர் நிய மிப்பார் அல்லது நீக்குவார்.

**15. மாகாண சட்டமா அதிபர் - பிரதம சட்டவாதி**

1) மத்திய அரசுக்கு சட்டமா அதிபர் இருப்பது போல் ஒவ்வொரு மாகாண அரசுக்கும் ஒரு சட்டமா அதிபர் அல்லது பிரதம சட்டவாதி இருப்பார்.

2) மாகாண அரசின் சட்டமா அதிபரின் செயற்பாடுகளும் பொறுப்புக்களும் மாகாண அளவில் மத்திய அரசின் சட்டமா அதிபருக்குச் சமாந்தரமாக இருக்கும்.

3) மாகாண சட்டமா அதிபரை, மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரம் ஆளுநர் நியமிப்பார்.

4) மாகாண சட்டமாஅதிபர், மாகாண அரசாங்கத்தின் பிரதம சட்டவாதியாவார். மேலும், பிரதம சட்ட ஆலோசகராவார்.

5) மாகாண சட்டமாஅதிபர் தொடர்பான சகல விடயங்களும் அதற்குரிய மாகாண சபையினாலேயே நிர்ணயிக்கப்படும்.

**16. மாகாண சட்டசபையின் அடிப்படை உரிமைகள்**

1) அரசியல்யாப்பில் நாடாளுமன்றத்திற்கென மட்டும் பிரத்தி யேகமாக ஒதுக்கப்படாத ஏனைய சகல விடயங்கள் தொடர்பாகவும், மாகாண சட்டசபைகள் சட்டங்களையும், சாசனங்களையும் ஏற்படுத்தும்.

2) அரசியல்யாப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை மீறாத வகை யில் மாகாண சட்டசபை, சட்டங்களையும் சாசனங்களையும் ஏற்படுத்தவும், தீர்மானங்களையும் சிபாரிசுகளையும் மேற் கொள்ளவும் முடியும்.

3) மாகாண சட்டசபைக்கும் அதன் அங்கத்தவர்களுக்குமான காப்புரிமைகளும் சிறப்புரிமைகளும், நாடாளுமன்றத்திற்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் இருப்பது போன்றே வழங்கப்பட வேண்டும்.

4) ஒரு மாகாண அரசு ஜனாதிபதி ஆட்சியின் கீழ் இருக்கும்பொழுது, அந்த மாகாண சட்டசபையின் சட்டங்கள் இயற்றும் அதிகாரங்கள் இடம் மாற்றப்படும். ஆனால், எத்தருணத்திலும் மாகாண அரசின் நிறைவேற்று அதிகாரங்கள் இடமாற்றம் செய்யப்படமாட்டாது. குறிப்பிட்ட அவசரகால விதிகளுக்கு ஏற்ப மாகாண சட்டசபை இடைநிறுத்தப்பட்டாலோ அல்லது கலைக்கப்பட்டாலோ, சகல நிறைவேற்று அதிகாரங்களையும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஊடாக ஆளுநரே நேரடியாக பிரயோகிப்பார்.

## 17. மாகாணத்தின் அரசியல்யாப்பு

1) மாகாண சட்டசபைகள், குடியரசின் அரசியல்யாப்பிற்கு முற்று முழுதும் இசைவான முறையில் தமக்கென சொந்த அரசியல் யாப்பினை, மாகாண சட்ட சபையின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் உருவாக்கிக் கொள்ளலாம். இத்தகைய அரசியல்யாப்பினை, 'அவசரகாலம்' என்பதின் கீழ் மாகாண சட்டசபை கலைக்கப்படும் போது ஜனாதிபதி இடை நிறுத்தி வைக்கலாம். ஆனாலும், ஜனாதிபதியின் ஆட்சி ரத்துச் செய்யப்பட்டவுடன், உடனடியாக இம் மாகாண அரசியல் யாப்பு மீண்டும் செல்லுபடியானதாகும். மாகாண அரசியல் யாப்பின் முழுமையான அல்லது அதன் ஒரு பகுதியின் செல்லுபடியானது, அது கோரப்படும் பட்சத்தில், உயர்நீதிமன்றத்தினால் மட்டுமே தீர்மானிக்கப்படும்.

2) மாகாண சட்டசபையும் மாகாண அரசாங்கமும், நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும், இறைமைக்கும் பங்கம் ஏற்படுத்தும் நடைவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு அரசியல் யாப்பு கட்டுப்படுத்தலாம். எனினும், இறுதி முடிவை எடுப்பதற்கும், அதனை நிறைவேற்றுவதற்குமான அதிகாரத்தினை, பாராளுமன்றமும், மத்திய அரசாங்கமும் கொண்டிருக்கும். எந்த விடயம் சம்பந்தமான தெரிவுகளையும் பிரேரணைகளையும் சிபாரிசு களையும் மத்திய அரசிற்கு முன்வைப்பதற்கு, மாகாண சட்ட சபைக்கும் மாகாண அரசிற்கும் உரிமை இருத்தல் வேண்டும்.

## 18. மாகாண அரசாங்கத்தின் உருவாக்கம்

### 18a. அமைச்சர்கள் அவை உருவாக்கம்

மாகாணத்திற்கான அமைச்சரவையின் உருவாக்கம், ஒரு தேர்தலைத் தொடர்ந்து மாகாண அரசாங்கத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு கட்சியின் அல்லது ஒரு கட்சிக்கூட்டின் தலைவரது பிரத்தியேக உரிமையாகும்.

முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல்யாப்பு சீர்திருத்த முன்மொழிவுகளின் பின்னர், (1) மாகாண சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்ட சகல கட்சிகளையும் பிரநிதித்துவப்படுத்தும் நிறைவேற்றதிகாரம் கொண்ட அமைச்சுச் செயற்குழுக்கள் (2) மாகாண சட்ட சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் அவற்றின் பிரதி நிதித்துவ விகிதத்தின் அடிப்படையில் அமையும் அமைச்சர்கள் அவை ஆகியன ஒரு பொருத்தமான ஆட்சியமைப்புக்கு இருந் தாக வேண்டும் என ஒரு வலுவான எண்ணம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இக்கருத்து, பின்வரும் காரணங்களால் பொருத்தமற்றது -

1) தமிழர்களுடைய கோரிக்கையானது, ஒரு நிர்வாகச் சீர் திருத்தத்திற்கான கோரிக்கை மாத்திரமே என்று அதனை எளிமையாக்கிவிட முடியாது. உண்மையில், அது அரசி யல் அதிகாரத்தில் பங்குபற்றுவதற்கான கோரிக்கை யாகும்.

2) மாகாணத்து மக்களின் ஜனநாயக அபிலாஷைகளின் முன்னேற்றத்தை, அதுவாக இயல்பாக பரிணாம வளர்ச்சி அடைய அனுமதிக்க வேண்டும்.

3) ஒரு குறிப்பிட்ட நிலைமையில் இப்படியானதொரு தற்காலிக ஒழுங்காக ஒரு விசேட தேவை இருப்பினும், நீண்டகால நோக்கத்திற்கு குந்தகம் விளைவிக்கக் கூடியதும் அரசியல் முன்னேற்றத்துக்கு இடையூறாகவும் இருக்கும் வகையில் அதனை ஒரு நிரந்தர ஒழுங்காக ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

4) **ஒற்றுமையானதோர் அரசியல் நிகழ்ச்சி நிரலுடன் இனங்காட்டமுடியாதிருக்கும் பல்வேறு கட்சிகளில் இருந்து நியமிக்கப்பட்டவர்களை இணைத்து ஓர் அரசாங்கம் உருவாக்கப்படின் அந்த அரசாங்கத் தின் முதல்வரும் மற்றைய அமைச்சர்களும், பாரம் பரிய ஜனநாயக முறைமைகளுக்கோ அல்லது அர சியல் யாப்புக்கடமைகள் மற்றும் கூட்டுப்பொறுப்பு களுக்கோ, மாகாணத்தின் மக்கள் பிரதிநிதிகளின் அவைக்கு பதிலளித்தல், காரணம் காட்டுதல் வேண்டும் என்றோ கட்டுப்படுத்த முடியாது போகும்.** மேலும், இவ்வாறு அமைக்கப்பட்ட அரசாங்கம் அதனது

செயற்பாடுகளிலும் ஈடுபாடுகளிலும் திறனற்றதாகவும் காத்திரமற்றதாகவும் இருப்பதற்கு வழி சமைத்து, அதனால் மக்கள் அன்னியப்படும், விரக்தியடையும் நிலையேற்படும்.

எனவே, அமைச்சர்கள் சபையின் உருவாக்கம், சட்ட சபையில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட கட்சி அல்லது ஒரு கட்சிக்கூட்டைச் சேர்ந்த முதலமைச்சரின் பிரத்தி யேகமான சிறப்புரிமை அதிகாரத்துக்கும் பொறுப்பிற்கும் விட்டு விட வேண்டும்.

**நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைச்சுக்களின் செயற்குழுவானது, மாகாண முதலமைச்சர்களின் பதவிகளை வெறும் பெயரளவிலுள்ளதாகவே ஆக்கி விடும்.** முதலமைச்சருக்கு, அமைச்சர்களை நியமிக்கவோ, அவர்களுக்கான பொறுப்புகளை ஒதுக்கவோ, தனிப்பட்ட சிறப் புரிமை அதிகாரம் இல்லாது போய்விடும். இதனால், முதல மைச்சரானவர் அமைச்சர் சபையின் வெறும் சம்பிரதாயத் தலைவராகவும் அமைச்சர் சபையைக் கூட்டுவதற்கான வெறும் அழைப்பாளராகவுமே இருப்பார்.

எதுவித காரணத்திற்காகவும், இவ்வகையாகக் கூட்டி அமைக் கப்பட்ட அரசாங்க உருவாக்கம் நல்ல ஜனநாயகத்தின் வடிவ மென்றோ அல்லது நாட்டிற்கு இன்றியமையாதது என்றோ மத்தியிலுள்ள அரசியல் தலைவர்கள் கருதினால், இப்படியான கட்டுமானத்தை நடைமுறைப்படு த்துவதும் செயற்படுத்துவதும் முதலில் மத்தியிலே ஆரம்பிக்கப்பட வேண்டும். **செயற் குழுக்களின் உருவாக்கங்கள், அதன் செயற்பாடுகள் நடைமுறைகளுக்கான வழக்கங்கள் மரபுகள், அலுவல் களை நடத்துவதற்கான நெறிமுறைகள் ஆகியன வற்றை மாகாண சட்டசபையினரும் மாகாண அரசாங் கங்களும் அவ்வப்போது பாராளுமன்றத்திலிருந்தும் மத்திய ஆட்சியமைப்பில் இருந்தும் பின்பற்றிக் கற்கட்டும்.**

## 18b. மாகாண அமைச்சர்களின் எண்ணிக்கை எல்லை

அரசியல்யாப்பில் குறிப்பிடப்படும் பதவிகளின் அடிப்படையில் மாகாண அமைச்சர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப் படுதலாகாது. எனினும், **மத்திய அரசாங்கம் உட்பட அனைத்து அரசாங்கங்களினதும் அமைச்சர் பதவி களின் எண்ணிக்கையின் அதிகபட்ச மற்றும் குறைந்த**

பட்ச வரையறைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகள் அரசியல் யாப்பில் ஏற்படுத்தப்படலாம். உதாரணமாக, மத்திய அல்லது மாகாண அரசாங்க அமைச்சர்களின் மொத்த எண்ணிக்கையானது, 5 பேருக்குக் குறையாமலும், அந்தந்த அவைகளின் மொத்த எண்ணிக்கையில் 15 சதவிகிதத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படலாம்.

அந்தந்த அரசாங்கங்களின் ஆட்சிக்குரிய நிலப் பிரதேசங்களின் சனத்தொகையின் விகிதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அமைச்சர்களை மத்திய, மாகாண அரசாங்கங்கள் கொண்டிருப்பதற்கும், பின்பற்றி நடைமுறைப்படுத்துவதற்கும், வேண்டிய நிபந்தனைகளை அரசியல்யாப்பு உள்ளடக்கியிருப்பது அவசியமாகும்.

## 19. நிதி அதிகாரப்பகிர்வு

மத்தியஅரசில் அளவுக்கு அதிகமாகத் தங்கியிருக்காது மாகாண அரசு தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்ற, அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த, போதியளவு வருவாய் கிடைப்பதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான ஊற்றுமூலங்கள் அதற்கு இருத்தல் வேண்டும். அதற்கிணங்க, அரசியல்யாப்பானது நிதி ஊற்றுமூலங்களை போதியளவு பகிர்வதுடன், மத்திய வருவாயிலிருந்து மாகாண அரசுகளுக்கு கட்டளைசார் பங்கீடுகள் மேற்கொள்வதற்கான தெளிவான விதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

வரிகளை அறவிடுவதற்கான தகுந்த சாதனத்தை மாகாண அளவில் அபிவிருத்தி செய்வதற்கு குறிப்பிட்ட காலம் தேவை. இப்படியான சாதனத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஒத்தாசையை மாகாண அரசிற்கு வழங்குவது மத்திய அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும். வருமானம் திரட்டுவதற்கான ஒரு நிரந்தரக் கட்டுமானம் முழுமையாக ஸ்தாபிக்கப்படும் வரை, அந்தந்த மாகாண அரசாங்கங்களின் இணக்கப்பாட்டுடன், ஓர் இடைக்கால ஒழுங்கினை மத்திய அரசாங்கம் ஏற்படுத்தலாம். மற்றைய அதிகாரங்களின் பரவலாக்கம் அர்த்தபுஷ்டியுள்ளதாக இருக்க வேண்டுமானால், வெறும் நிதிப் பகிர்ந்தளிப்பல்ல, நிதிகளுக்கான அதிகாரப்பகிர்வே இன்றியமையாததாகும். நிதி அதிகாரங்கள் மத்தியப்படுத்தப்படுவது, மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களிற்கும் இடையேயான நல்லுறவுகளை அரித்துவிடுவதோடு ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளுக்கும்

பங்கத்தை ஏற்படுத்திவிடும். மாகாண அரசாங்கம் வேறொரு கட்சியினால் ஆளப்படுவதானால், மத்தியில் இருக்கும் மற்றைய கட்சியின் ஒருதலைசார் அரசியல் காரணமாக மாநில கட்டமைப்பின் ஸ்திரமும் எக்காலகட்டத்திலும் சீர்குலைக்கப்படலாம். எனவே, மாகாண வருமானத்திற்கானதும், அதனைப் பெறுவதற்குமான கட்டமைப்புக்களை ஏற்படுத்துவதற்குரிய சட்டவாக்க அதிகாரங்களை, வெவ்வேறு அர்த்தங்கள் கொடுக்க முடியாதவாறும் திரித்துக் கூற முடியாதவாறுமான வகையில், மாகாண அரசுகளுக்கு வழங்கப் படல் வேண்டும்.

**19a. மாகாணத்தின் நிதி**

1988ன் 13வது திருத்தச்சட்டப்படி அரசியல் யாப்பில் வழங்கப் பட்டதைவிட அதிகமான நிதி அதிகாரப் பகிர்வு மாகாண அரசுகளுக்கு இருக்க வேண்டும் என்பது பொதுவாகவே அறிந்து கொள்ளப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தின் வருமானங்களிலிருந்து தேசிய நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் நிதியுடன், பின்வரும் குறைந்தபட்ச நிதி அதிகாரங்களும் மாகாணங்களுக்கு பரவலாக்கப்பட்டு உரித்தாக்கப்படல் வேண்டும்.

a) மதிப்புக் கூட்டு வரியானது விற்பனை வரியின் சீர்திருத்திய வடிவமே என்பதனால் மதிப்புக் கூட்டு வரி உட்பட மாகாணத்திற்குள்ளான மொத்த மற்றும் சில்லறை விற்பனைகள் மீதான வரிகள்,

b) சேவைகள் மீதான வரிகள்.

c) வர்த்தகத்தில் ஈடுபடும் தனிநபர்களின் கம்பனிகள், கூட்டுத்தாபனங்களின் மூலதனம் மற்றும் சொத்துக்கள் மீதான வரிகள்

d) பந்தயங்கள், பரிசு சீட்டுக்கள், பரிசு போட்டிகள் மீதான வரிகள்.

e) கள் இறக்குதல் விற்பனைக்கான அனுமதி, மதுச்சாலைகள், அருந்தகங்களின் உரிமங்கள் உள்ளடங்கலான போதை திராவகங்களின் உடமை, போக்குவரத்து, விற்பனை மீதான கட்டணங்கள், வரிகள்.

f) நாடாளுமன்றத்தின் வரிவிதிப்புக்களுக்கு உள்ளடங்காத உற்பத்திகள்மற்றும் கைத்தொழில்கள் மீதான தீர்வை

வரிகள் (இது விடயமாக, தொழிற்சாலைகளின் அளவு அடிப்படையில், 50 தொழிலாளர்களுக்கு குறைந்த ஊழியர் களை கொண்ட தொழிலகங்கள் தொழிற்சாலைகளினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு மாகாண அர சாங்கம் தீர்வை வரிகளை விதிப்பதற்கான அதிகாரத்தை நாடாளுமன்றம் வரையறுக்கலாம்)

g) மோட்டார் வாகனங்களை பதிவு செய்தல், வாகன அனு மதி ஆகியவற்றிகான கட்டணங்கள்.

h) மருந்துகள் மற்றும் ஏனைய இரசாயனப் பொருட்களின் விற்பனை ஒப்பந்தங்களுக்கான உரிமங்கள் மீதான கட்டணங்கள், வரிகள்.

i) மாகாணத்தினுள்ளிருக்கும் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை கைமாற்றுவதற்கான தீர்வைகள், வரிகள்.

j) வீதிக் கட்டுமானக் கட்டணம்.

k) விவசாயம், மற்றும் தோட்டப், பண்ணை வருமானங்கள் மீதான வரிகள்.

l) மத்திய நிரலில் உள்ளடக்கப்படாத விடயங்கள் சம்பந்த மான சட்ட விதிகள் மற்றும் கட்டளைகளின்படி விதிக்கப் படும் கட்டணங்கள், தண்டப்பணங்கள்.

m) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களுக்கான முத்திரைப் பணம் அடங்கலாக நீதிமன்றத்தால் விதிக்கப் படும் கட்டணங்கள், தண்டப்பணங்கள்.

n) நிறைகளையும், அளவைகளையும் ஒழுங்குபடுத்தும் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்.

o) எல்லா விதமான நிலவரிகளும்,

p) அசையும் மற்றும் அசையா தனியார் சொத்துக்கள் மீதான வரிகள்.

q) நாடாளுமன்ற சட்டங்களினால் தேசிய வருமானத்துக்குரிய வளங்கள் என பிரகடனப்படுத்தப்பட்டவை தவிர்ந்த கனிமங் கள், சுரங்கங்களின் மீதான அனுமதிக் கட்டணங்கள், வரிகள்.

r) தேயிலை, இறப்பர், தென்னை தவிர்ந்த ஏனைய பெருந் தோட்டங்கள் மீதான தீர்வைகள், வரிகள்.

s) மாகாணத்தின் உள்ளே வரும், வெளியே செல்லும் பொருட்கள் மீதான வரிகள்.

t) சகலவிதமான வீதிப் போக்குவரத்து வரிகள்.

u) கேளிக்கை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மீதான வரிகள்.

v) மாகாண அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களிலுள்ள வெளிநாட்டு தனிநபர்கள், தனியார் ஸ்தாபனங்கள், நாடுகள், சர்வதேச நிதிஉதவி வழங்கும் ஸ்தாபனங்கள் ஆகியவையினால் வழங்கப்படும் உதவிகள், மானியங்கள்.

w) வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களால் வழங்கப்படும் பொதுக்கடன்கள், நன்கொடைகள்.

x) மாகாண அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் நாட்டின் தனியார்கள், ஸ்தாபனங்களிடமிருந்து திரட்டப்பட்ட பணம், நன்கொடை, மாகாண மக்களிடமிருந்து திரட்டப்பட்ட பொதுப்பங்களிப்பு நிதிகள்.

y) மத்திய அரசாங்கத்தினால் திரட்டப்பட்டு மாகாண அரசாங்கத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட நிகரத் தொகை.

z) இரு சட்டவாக்கப் பட்டியல்களிலும் குறிப்பிடப்படாத விடயங்கள் மீதான வரிகள், கட்டணங்கள்.

## 19b.மத்திய அரசாங்க நிதி

பின்வரும் பட்டியல் மத்திய அரசுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி மூலங்களாகும்-

a) விவசாயம் பண்ணை ஆகியவற்றின் வருமானம் தவிர்த்து, தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் குழுமங்கள் மீதான வருமானவரிகள்.

b) மாகாண அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டு திரட்டப்படுவதைத் தவிர்ந்த மற்றைய தீர்வை வரிகள்

c) சுங்க வரிகள், இறக்குமதி ஏற்றுமதி வியாபாரம் மற்றும் வணிகங்கள் மீதான வரிகள் உட்பட.

d) தேயிலை மற்றும் தேயிலைத் தோட்டங்கள் மீதான வரிகள்

e) மத்திய அரசின் பட்டியலிருக்கும் விடயங்களின் மீதான முத்திரைக் கட்டணங்களும் வரிகளும்

f) மூலதனப் பங்குகள் மற்றும் வருங்கால மூலதனச் சந்தைகள் ஆகியவற்றின் பரிமாற்றங்கள் மீதான வரிகள்

g) நாளாந்த வாராந்த செய்தி ஏடுகள் மீதான வரிகள்

h) மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் மூலம் பெறும் வருமானம்.

i) மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் நாட்டின் தனியார்கள், ஸ்தாபனங் களிடமிருந்து திரட்டப்பட்ட நிதிகள், நன்கொடைகள், பொதுப்பங்களிப்பு நிதிகள்.

j) வெளிநாடுகளிலிருந்து மத்திய அரசாங்கத்தின் நிதிக்காக திரட்டப்படும் நன்கொடைகள் மற்றும் கடனுதவிகள்.

k) மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டங்களுக்கும் வெளிநாட்டுத் தனிநபர்கள், தனியார் ஸ்தாபனங்கள், நாடுகள், சர்வதேச நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் ஆகியவையினால் வழங்கப்படும் உதவிகளும் கொடைகளும்.

l) மாகாண அரசினால் திரட்டப்பட்டு மத்திய அரசிற்கு மாற்றம் செய்யப்பட்ட நிகரத்தொகை

அ) நீதிமன்றத்தினால் அறவிடப்படும் கட்டணங்கள் தவிர, மத்திய நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக அறவிடப்படும் கட்டணங்கள்

- மத்திய நிரலிலுள்ள நிதி வருமானத்திற்கான விடயங் களின் எண்ணிக்கை, மாகாண நிரலிலும் பார்க்க ஒப்பீட்டளவில் குறைவானதாகத் தோற்றமளிக்கக் கூடும். ஆனால், உண்மையில், மத்திய அரசாங்கத்தி னது வருமான வருவாய்களுக்கான மொத்த கொள் திறன், எல்லா மாகாண அரசாங்கங்களின் வருமானங் களின் கூட்டு வருவாயிலும் பார்க்க அதிகமானதாக இருக்கும். இது ஏனெனில், வருமானவரி, சுங்கவரி, தீர்வைவரி (உற்பத்திகளின் மீதான வரிகள்) ஆகிய மூன்று பெருமளவான நிதி வருமானத்தின் ஊற்று மூலங்களை மத்திய அரசே வைத்திருக்கின்றது.

ஆதலால், தேசிய பொருளாதாரத் திட்டமிடல், நிதி ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட அபி விருத்தித் திட்டங்களின் பிரகாரமும், இவ் ஆணைக்குவினால் வருடாந்த நிதிப் பங்கீட்டுக்காக நிர்ணயிக்கப்படும் சூத்தரத்தின் பிரகாரமும், மத்திய அரசாங்கத்தின் வருவாயின் கணிசமான பகுதி மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.

- மாகாண கட்டுமான அமைப்பு முழுமையாகவும் காரிய ஆற்றல் கொண்டதாகவும் விருத்தியடையும் வரையான அசாதாரண நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, போதியளவு நிதியை மாகாண அரசுகளுக்கு பங்கிட்டு வழங்குவது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும்.
- சில முக்கிய வரிகள் நாடுமுழுவதிலும் ஒரே சீரானதாக இருக்க வேண்டும் என ஓர் அபிப்பிராயம் இருக்கலாம். அப்படியானவற்றில், மாகாணங்களின் தீர்மானங் களுக்கு உச்ச - கீழ் வரம்புகளை மத்திய அரசு வரையறுக்கலாம்.

**19c தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு**

**ஒரு தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு உருவாக்கப்பட்டு, அதற்கு உப ஜனாதிபதியை அப் பதவிக்கே உரியதான தலைவராகவும், மேலும் ஜனாதி பதி சிறந்த தகுதிகளமைந்த ஒரு நிபுணரை கபினட் அமைச்சர் அந்தஸ்துடன் கூடிய உபதலைவராகவும், நியமிக்க வேண்டும்.**

**வருமானவரி வருவாயிலிருந்து 75 சதவீதத்திற்குக் குறை யாமலும், சுங்கவரி வருவாயிலிந்து 50 சதவீதத்திற்குக் குறையாமலும், சமூக பாதுகாப்பு வரியிலிருந்து 90 சத வீதத்திற்கு குறையாமலும், மாநில அரசாங்கங்கங்ளுக்கு கட்டாய அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்** என அரசியல் யாப்பில் கூறப்பட்டிருக்க வேண்டும். மாகாண அரசு களுக்கு இந்த வருவாய்களைப் பங்கிடுவதற்கான சூத் திரத்தை தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு வருடா வருடம் மாகாண அரசாங்கங்களுடன் கலந்து பேசி நிர்ண யிக்கும்.

பங்கிட்டளிப்பதற்கான சூத்திரத்தை தீர்மானிப்பதற்கு, தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு, மாகாணங்களின் சனத்தொகையின் அளவு, ஏழ்மை விகிதம், பின் தங்கிய

நிலை, நடைபெற்றுக் கொண்டிருக்கும் வளர்ச்சித் திட்டங்களின் தேவை ஆகிய இன்னோரன்ன விடயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனினும், மீண்டெழும் வருவாய் செலவினங்களின் நிர்வாகம் பாதிக்கப்படுமளவிற்கு வருடாவருட பங்கீட்டு விகிதம் அதிக அளவு மாற்றம் கொண்டதாக அமையக் கூடாது.

மத்திய அரசின் நிகரவருவாயிலிருந்து வழங்கப்படும் சிறப்பு மான்யங்களையும் வரவுகளையும் மாகாண அரசாங்கங்கள் பெறுவதற்கான அடிப்படைகளையும் குறிப்புகளையும், தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு சிபாரிசு செய்யும்.

தேசிய பொருளாதார திட்டமிடல் நிதி ஆணைக்குழு, **மத்திய அரசாங்கத்தினதும், மாநில அரசாங்கங்களினதும் பொருளாதார திட்டங்களை ஒருங்கிணைத்து, தேசிய பொருளாதாரத் திட்டமிடல்களையும் கொள்கைகளையும் தயார் செய்யும்.** இவ் ஆணைக்குழுவானது அமுல்படுத்தும் திட்டங்களை இணைப்பதாகவும் கண்காணிப்பதாகவும் செயற்படுவதோடு, திட்டங்களை அமுல்படுத்தும் விடயங்கள் சம்பந்தமான சிபாரிசுகளை மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் வழங்கும்.

## 20. அரச நிறுவனங்களில் இனவிகிதாசாரம்

நாட்டின் சிறுபான்மை சமூகங்களின் இன விகிதாசாரத்தின் அளவானது குறைந்தபட்சமாகவேனும், கீழ்வருவனவற்றில் பேணப்பட வேண்டுமென அரசியல்யாப்பில் நெறிமுறை வகுக்கப்படுதல் வேண்டும்.

1) தேசிய பாதுகாப்பு மற்றும், மத்திய பாதுகாப்பு படை

2) மத்திய பொலீஸ் படை

3) மத்திய அரசாங்க சேவை

4) அரசாங்கத்தின் பகுதியான நிறுவனங்களில் சேவை

அங்ஙனமே, ஒவ்வொரு மாகாண அரசும் தத்தம் மாகாணங்களிலுள்ள வேலைகள் மற்றும் ஏனைய வாய்ப்புகள் சம்பந்தமாக, அந்தந்த மாகாண மட்ட இன விகிதாசாரம் குறைந்தபட்சமாகவேனும் பேணப்படுவது கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

சிறுபான்மையான தேசிய இனங்கள் மேற்குறிப்பிட்ட துறைகளில் மிகவும் குறைவான விகிதாசாரத்தையே கொண்டிருக்கிறார்கள்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் எதுவுமே, இனப்பிரச்னையைத் தீர்ப்பதாக எத்தனையோ வாக்குறுதிகள் அளித்தும், இந்த அநீதியான நிலைமையைத் திருத்துவதற்கான செயற்பாடுகள் எதனையுமே மேற்கொள்ளவில்லை. எனினும், அரசாங்கம் தற்போது நிலவும் சமநிலைமையின்மையைத் திருத்துவதற்கு, அரசியல் யாப்பிற்கான முன்மொழிவுகளில் வேண்டிய நிபந்தனைகளை உள்ளடக்குவதோடு அரச துறைகளில் இப்போது நிலவும் மிகப் பெரிய இடைவெளியை நிரப்புவதற்கு ஓர் அவசர செயற்திட்டத்தை உருவாக்கி அதனை அமுல்படுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

## 20a உண்மையான தேசிய பாதுகாப்புப் படையை அமைப்பதற்கு

இலங்கை ஆயுத படையானது, தனிச்சிங்கள ஆயுதப் படையே என்ற தற்போதைய நிலையிலிருந்து மாற்றப்பட்டு, உண்மையான, தேசிய (தேசியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும்) பாதுகாப்பு படை என்ற நிலைக்கு உருமாற்றப்பட்டால் ஒழிய, வெறும் அரசியல்யாப்பு சீராக்கல் மூலமாகவோ அல்லது சில சலுகைகள் மூலமாகவோ உண்மையான ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்ப முடியாது. இலங்கை அரசின் ஆயுதப்படையின் கட்டமைப்பானது சகல சமூகங்களிலுமுள்ள இளைஞர்களை அதிக அளவிலான விகிதத்தில் சேர்த்து ஒற்றுமையாகவும் காத்திரமாகவும் இணைந்து செயற்பட வைத்தல் வேண்டும். அப்பொழுதுதான், இலங்கையின் சகல சமூகங்களினதும் நலன்கள் சம்பந்தமாக எதுவித பாரபட்சமுமின்றி ஆயுதப்படை செயற்படமுடியும். அப்பொழுது தான், சிறுபான்மை இனத்தினரும் அரச ஆயுதப்படைகளை தங்களது தேசத்தின் படை என்று உணர ஆரம்பிப்பார்கள்.

குறுகிய காலத்தில் இந்த இலக்கை அடைந்திட முடியாது என வாதிடலாம். எனினும், இம்மாற்றம் தேவையானது என்பதினை அரசாங்கம் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு, சிறுபான்மை சமூகங்களின் தலைவர்களை தொடர்ச்சியாக ஈடுபடுத்தி, இவ்விலக்கை நோக்கி தீவிரமாகச் செயற்பட வேண்டும். காலம் எடுக்கலாம், ஆனாலும், அதனை அடைய முடியும், அதனை அடைவது அவசியமானது.

தற்போது நிலவிடும் பயங்கரவாத நிலைமையின் காரணமாக, தேர்தல் அரசியலை வரித்துக்கொள்ளும் தமிழ்க் கட்சிகள் தற்பாதுகாப்பிற்கும், முக்கியமாக எல்.ரி.ரி.ஈ-யினரிடமிருந்து அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், அவர்கள் ஆயுதங்களையும்,

ஆயுதம் தாங்கிய பிரிவினரையும் வைத்திருக்க விடவேண்டுமென்பது தவிர்க்க முடியாததாகும். வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சில நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் இராணுவத்தோடு சேர்ந்து வடக்கு- கிழக்கில் இயங்கக்கூடும். ஆனாலும், இது சிறு பான்மை சமூகத்தினருக்கு ஆயுதப்படைகளில் உரிய இடமளிப்ப தற்கான செயன்முறையென அங்கீகரிக்கவியலாது. மேலும், இச் செயல்முறைகள் இந்தத் தமிழ்க் குழுக்களை, அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும், தங்களது சொந்த சமூகங்களிடமிருந்து மேலும் அன்னியப்படுத்தி விடுகின்றது..

**தேசத்தின் பன்மைத்துவத்தை பிரதிபலிப்பதும் - பிரதிநிதித் துவப்படுத்துவதுமாக இலங்கையின் ஆயுதப்படைகளைக் கட்டியெழுப்புவது, நாட்டின் நீண்டகால நோக்கங்களுக்கும் ஸ்திரத்தன்மைக்கும் அடிப்படைத் தேவை என்பதோடு, அது மாத்திரந்தான் எல்லாவகையான தீவிரவாத, மக்கள் விரோத மற்றும் சமூக விரோத சக்திகளை ஆயுதப்படையினர் இலகுவாகவும் காத்திரமாகவும் கையாள ஆற்றலளிக்கும்.**

எல்.ரி.ரி.ஈ. தனது உளவாளிகளையும் போராளிகளையும் ஆயுதப்படைகளின் கட்டமைப்புக்களில் ஊடுருவி நிலைகொள்ளச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கும் என சில சாரார் அச்சம் கொள்ளக் கூடும். இவ் அச்சத்தை மனதில் கொண்டு தமிழ் இளைஞர்களை ஆயுதப்படையில் சேர்ப்பதைத் தடுப்பதோ அல்லது அதில் தயக்கம் காட்டுவதோ சரியானதல்ல. சிங்கள இளைஞர்களைச் சேர்க்கும் போது கூட ஊடுருவுபவர்களும், விட்டோடுபவர்களும் இருந்திருக் கிறார்கள் என்பதைக் காட்டும் கடந்த கால அனுபவங்கள் நிறையவே உள்ளன. எனவே அவ்வாறான ஊடுருவல்களைத் தடுக்கும் தணிக்கை அமைப்புக்களும் சமாந்திரப்படுத்தும் பொறிமுறைகளும் பொதுவானதாகவும், புத்திசாலித்தனமாகவும், பிரயோகிக்கப்படல் வேண்டும். தமிழ் இளைஞர்களை ஆயுதபடைகளில் முறைப்படி இணைத்துக் கொள்ளாது, விலக்கி வைப்பது மேன்மேலும் தமிழர்களை ஆட்சி அமைப்புகளிலிருந்து அன்னியப்படுத்துகிறது. நாட்டின் அனைத்து இனங்களும் இணைந்து வாழுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சிகளிலிருந்து தமிழ் பொதுமக்களை மேலும் விலக்கி வைக்கிறது. இது எல்.ரி.ரி.ஈ.க்கும் சிங்கள தீவிரவாதி களுக்குமே உதவுகிறது.

**எனவே, இலங்கை ஆயுதபடைகளில் தமிழ் இளைஞர்களைப் பெருமளவாக முறைப்படி இணைப்பது எல்லா வகையிலும் மிகவும் முக்கியமானது என்பதினை, ஈ.பி.ஆர்.எல்.எவ். அழுத்தமாகத் தெரிவிக்கிறது.**

## 20b. அரசாங்க நிர்வாக சேவை, மற்றைய சேவைகளில் இனவிகிதாசாரம்

15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தநிலைமை காரணமாகவும், முன்னைய அரசாங்கங்களினதும் அரச அதிகார அலுவலர்களதும் படிப்படியானதும் மறைமுக மானதுமான கையாளுதல்களினாலும், அரசாங்க நிர்வாக சேவையிலும் மற்றைய சேவைகளிலும், பிரதானமாக உயர்மட்டத்தில், பாரிய அளவில் சமாந்திரமற்ற நிலைமை காணப்படுகின்றது. இக்குறைபாட்டை நீக்குவதற்கு காத்திரமான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை. **சகல சேவைகளிலும் உள்ள இன சமாந்திரம் அற்ற நிலையின் எண்ணிக்கை தெளிவாகவும் முழுமையாகவும் இனங் காட்டப்பட்டு, மனத்தின் மையுடன் அவற்றைச் சரிசெய்வதற்கான வழிமுறைகள் இதய சுத்தியுடனும் தீர்மானகரமாகவும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.**

வழமையான அரசாங்கத்தின் செயன்முறைகள் அசாதாரண நிலைமைகளிலும் சூழ்நிலைகளிலும் எட்டப்பட வேண்டிய இலக்குகளை எய்திடப் போதியதாகாது. எனவே, ஒரு கால அட்டவணைக்குள் இலக்குகளை அடைவதானால் அரசாங்கம் பிரத்தியேக கவனம் செலுத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

★★★

இணைப்பு - 1

## மத்திய நிரல்

# நாடாளுமன்றத்தினால் மட்டுமே சட்டவாக்கங்கள் செய்யப்படுவதற்கு உரியதான விடயங்கள்

01. தேசிய பாதுகாப்பு விவகாரங்கள்

1) இலங்கையின் பாதுகாப்பும் அதனோடு தொடர்பான ஒவ்வொரு விடயங்களும். யுத்தமென்றதொரு நிலையேற்படும்போது அதற்காகவேண்டிய எல்லாவற்றையும் செய்தல், அதன் பின்னர் அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டியவற்றைச் செய்தல், மேலும் அது தொடர்பாக கலைக்கப்பட வேண்டியவற்றை முடிவுக்குக் கொண்டு வந்ததன் பின்னர் செய்யப்பட வேண்டியவைகள்.

2) கடற்படை, இராணுவப்படை மற்றும் விமானப்படை; அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் ஏனைய ஆயதப் படைகள், துணைப்படைகள்;

3) இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு ஆயுதப்படையினது பிரிவையோ அல்லது இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வேறு எந்தவொரு பாதுகாப்புப்படைப் பிரிவையோ எங்காயினும் நிலைகொள்ளச் செய்தல் அல்லது அவ்வாறான படைப்பிரிவுகளில் ஏதாவதொரு பகுதியை ஏதாவதொரு மாகாணத்தினதும் சிவில் நிர்வாக ஒழுங்குகளை நிலைநாட்ட அத்தியாவசியப்படும்போது வழங்குதல், மேலும் இப்படைகளிலுள்ள உறுப்பினர்களின் அதிகார எல்லை, முன்னுரிமைகள் பொறுப்புக்கள் போன்றவற்றை வரையறை செய்தல்.

4) படைகள், நிரந்தரமாக நிலைகொண்டுள்ள பகுதிகளின் நிலப்பிரதேச எல்லைகளை வரையறை செய்தல், அப்பிரதேசங்கள் தொடர்பான கட்டுப்பாடுகள் றெறிமுறைகளை நிர்ணயித்தல்.

5) கடற்படை, இராணுவம் மற்றும் விமானப்படைகள் தொடர்பான வேலைகள்.

6) தேசிய பாதுகாப்பு ஆணைக்குழு.

02. மத்திய பொலிஸ் படை

1) மத்திய பொலிஸ் படைப்பிரிவுகள், அவற்றின் அமைப்புக்கள், கட்டுமானங்கள், பராமரிப்புக்கள், நிர்வாகங்கள் என்பதுடன் அவற்றை எந்தெந்த இடங்களில் நிலை கொள்ளச் செய்தல், அவற்றின் செயற்பாடுகள் போன்றன;

2) மத்திய உளவுத்துறை மற்றும் மத்திய புலன்விசாரணை இலாகா என்பன;

3) ரெயில்வேக்கள், விமான சேவைகள், மற்றும் மத்திய அரசாங்கத்தின் தொழிற்சாலை அமைப்புக்கள் போன்றவற்றின் பாதுகாப்பு;

4) தேசிய பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பான முன்கூட்டிய தடுப்புக்காவல் கைதுகள்;

5) மத்திய பொலிஸ் ஆணைக்குழு.

03. ஆயுதங்கள் தோட்டாக்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள்

**தேசியரீதியான நிதி விடயங்கள்**

04. பணம் - உலோக நாணயங்கள், தாள் காசுகள், ஏனைய விதமான பணங்கள், சட்டரீதியான ஒப்பந்த பணத்தாள்கள், மேலும் சர்வதேச நாணயமாற்றுக்கள்.;

05. மாற்று உண்டியல்கள் மற்றும் சத்தியத்தாள்கள்;

06. வரி வருமானக் கொள்கைகளும் அது தொடர்பான ஏற்பாடுகளும்;

07. இலங்கை மத்திய வங்கி;

08. வர்த்தக வங்கிகள், காப்புறுதி மற்றும் நிதி வியாபார நிறுவனங்கள் தொடர்பான கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும்;

09. பங்குமாற்று வர்த்தகங்களையும், ஏனைய வகையான ஊக வியாபார சந்தைகளையம் நெறிப்படுத்துதல்;

10. மத்திய அரசின் வரவு-செலவுத் திட்டம்;

11. நிதி அதிகாரங்கள் தொடர்பாக அரசியல் யாப்பின் விதிகளுக்கமைய உரிய வரிகளை நிர்ணயம் செய்தல், திரட்டுதல்;

12. மத்திய அரசாங்கத்தால் பெறப்படும் பொதுக் கொடைகள் மற்றும் பொதுக் கடன்கள்;

13. வெளிநாட்டு உதவிகளைப் பெறல், மத்திய அரசின் திட்டங்கள் தொடர்பான வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தல். மேலும் வெளிநாட்டு உதவிகள் வெளிநாட்டு முதலீடுகள் பற்றிய தேசிய கொள்கைகளை நிர்ணயம் செய்தல்;

14. நாடு முழுவதற்குமென நடாத்தப்படும் லொத்தர்கள் தொடர்பானவை;

15. மத்திய சொத்துக்கள் மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் வருமானங்கள் தொடர்பானவை.

**வெளிநாடுகளுடனான உறவுகள் தொடர்பானவை**

16. வேற்று நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகள் தொடர்பான அனைத்து விடயங்களும்;

17. ஆழ்கடலிலோ, வானத்திலோ சர்வதேச கூட்டமைப்புக்களின் பொதுச் சட்டங்களுக்கு விரோதமாக மேற்கொள்ளப்படும் குற்றங்கள்;

18. குழந்தைகளை வெளிநாட்டவர்கள் தத்தெடுத்துக் கொள்ளல் தொடாபான விடயங்கள்;

19. குடியுரிமை, இயற்கையாகவே குடிமக்களாதல் மற்றும் அந்நியர்கள் பற்றியவை.

**பொருளாதார விடயங்கள்**

20. வேற்று நாடுகளுடனான வியாபாரம் மற்றும் வர்த்தகங்களை கட்டுப்படுத்துதலும் நெறிப்படுத்துதலும்

21. ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திகளின் தராதரங்களைப் பேணுவதற்கும் உயர்த்துவதற்கும் வேண்டிய நெறிமுறைகளை நிலைநாட்டுதல்;

22. மைதா மாவு, சீனி, தேயிலை, உப்பு, தென்னை உரங்கள், சீமெந்து மற்றும் காகிதங்கள் போன்ற அத்தியாவசியப் பண்டங்கள் மாகாணங்களுக்கிடையே வழங்கப்படுதல் விநியோகிக்கப்படுதல் தொடர்பாக நெறிப்படுத்துதல்கள்;

23. உள்நாட்டுக் கடலெல்லைகளுக்கப்பால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலும்;

24. தேயிலைப் பெருந்தோட்டங்கள் தொடர்பானவைகள்;

25. வியாபார நோக்கமுடைய அல்லது வியாபார நோக்கமற்ற எந்தவொரு கூட்டுத் தொழில் அமைப்பினையும் ஆக்குதல், அதன் செயற்படுமுறைகள் மற்றும் அதனை சட்டரீதியாக மூடுதல் ஆகியவை தொடர்பான விடயங்கள்;

26. நிறுவைகள் மற்றும் அளவைகள் தொடர்பான தேசிய நிலைகளை நிறுவுதல்;

27. பதிவு உரிமைகள், கண்டுபிடிப்புகள் மற்றும் சுயதயாரிப்புக்களுக்கான உரிமங்கள், அடையாளச் சின்ன உரிமைகள் மேலும் வியாபாரச்சின்ன உரித்துகள்.

**போக்குவரத்து, வீதிகள் மற்றும் தொடர்புகள் பற்றியவை**

28. சிவில் விமானப் போக்குவரத்து, விமான ஓடுபாதைகள் மற்றும் விமானத் தளங்கள்;

29. ரெயில் போக்குவரத்துகள், அவற்றின் ஓடுபாதைகள் மற்றும் ரெயில் நிலையங்கள்;

30. சர்வதேச வர்த்தகங்கள் மற்றும் அவ்வாறான போக்குவரத்துக்கள் தொடர்பாக பாவனையிலுள்ள துறைமுகங்கள் மற்றும் இறங்கு துறைகள்;

31. கப்பற் போக்குவரத்து மற்றும் கடற் போக்குவரத்துகளை நெறிப்படுத்துதல்;

32. வெளிச்ச வீடுகள், வெளிச்சக் கப்பல்கள் மற்றும் ஏனைய கப்பற் போக்கு வரத்துக்கான வழிகாட்டிகள், அடையாளங்கள்;

33. தேசிய பெருவீதிகள் (அவை மாவட்டங்களின் தலைநகரங்களை இணைப் பவையாகவும் மிக உயர்ந்த தரமுடையவையாகவும் அமைக்கப்பட்டிருக்கும்);

34. தபால் சேவைகள் மற்றும் தொலைத் தொடர்புகள் தொடர்பான விடயங்கள்;

35. மத்திய வானொலி ஒலிபரப்பு, மத்திய தொலைக்காட்சி உட்பட்ட தேசிய ஊடகங்கள்.

**எரிசக்தி தொடர்பானவை**

36. அணுசக்தி மற்றும் நீர்வளங்கள் மூலமான சக்திகளை ஆக்கல்

37. மத்திய மின்பகிர்வு நிலையங்களை நிர்வகித்தலும் பராமரித்தலும்,

38. எண்ணெய் வள வயல்கள், பெற்றோலிய உற்பத்திகள், பெற்றோலியங்கள் மூலமான உற்பத்திகள், நிலக்கீழ் வளங்கள், மற்றும் கனிமங்கள் ஆகியன தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளும், நெறிப்படுத்தல்களும்

**மனிதவள அபிவிருத்தி**

39. கல்வி:-

1) மத்திய அரசினால் நிதியிடப்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற பள்ளிக்கூடங்கள்;

2) மத்திய அரசினால் நிதியிடப்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற பல்கலைக்கழகங்கள்;

3) கல்வி, தொழில் நுண்கலைகள், மீன்பிடி, வியாபார முகாமைத்துவம், கைத்தொழில் ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் போன்றவை தொடர்பான நிறுவனங்களை தேசிய அளவில் நிறுவுதலும் நிர்வகித்தலும்;

4) தேசிய பொதுப் பரீட்சைச் சான்றிதழ்களுக்கான பரீட்சைகள் பற்றிய விடயங்கள்;

5) மத்திய மற்றும் மாகாண அரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய கல்வி ஆணைக்குழுவை உருவாக்குதல். இவ் ஆணைக்குழுவின் செயல்கள் பின்வருமாறு

- மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் பல்கலைக் கழகங்கள் மற்றும் உயர்தர பள்ளிக்கூடங்களுக்கான அடிப்படைத் தராதரங்களை நிர்ணயித்தல், அத்துடன் ஒவ்வொரு மாகாணத்திலிருந்தும் எந்தெந்த பள்ளிக்கூடங்கள் மற்றும் பல்கலைக் கழகங்கள் இவ்வாறாக மத்திய

அரசுக்கு உட்படும் என்பதை அந்தந்த மாகாணத்தின் முதலமைச்சரின் உடன்பாட்டுடன் அடையாளம் காணுதலும், அவற்றுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வரைமுறைகளை நிர்ணயம் செய்தலும், அவற்றின் நிர்வாகங்களை கண்காணித்தலும்;

- உயர்வகுப்புகளுக்கான ஆசிரியர்களின் கல்வித்தரம், ஆசிரியப்பயிற்சி, தெரிவு செய்யும் முறைகள் ஆகியவற்றிற்கான அடிப்படைத் தராதரங்களை நிர்ணயம் செய்தல்; மேலும்
- தொழில்சார் கல்விகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பான தேசிய தராதரங்கள் பராமரிக்கப்படுவதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

40. தேசிய அளவிலான விளையாட்டுக்களையும் அவற்றுக்கான உட்கட்டு மானங்களையும் அபிவிருத்தி செய்தல்.

41. மத்திய சுகாதார நிர்வாகம்

1) குறிப்பான நோக்கங்களுடன் தற்போது செயற்பட்டுவரும் விசேட வைத்தியசாலைகள்;

2) மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள பல்கலைக்கழகங் களுடன் இணைக்கப் பட்டுள்ள மருத்துவக் கல்விப் பயிற்சி வைத்தியசாலைகள்,

3) மருந்துகள் தயாரித்தல் மற்றும் விநியோகம் செய்தல் தொடாபான பொது நெறிமுறைகள்;

42. மருந்துகள், நச்சுப்பண்டங்கள் மற்றும் போதைப் பொருட்கள் தொடர்பான கட்டுப்பாடுகளும் நெறிமுறைகளும்;

43. உழைப்பாளர் நலன்கள்;

44. மாகாண முதலமைச்சர்களுடனான ஆலோசனையுடன் மத்திய அரசினால் வரையறுக்கப்பட்டு திட்டமிடப்பட்டு நிதியிடப்படுகின்ற விசேடமான வீட்டு செயற் திட்டங்கள், மற்றும் தேசிய ரீதியில் வறுமையை நீக்குவற்கான செயற்திட்டங்கள்:-

1) இச் செயற்திட்டங்கள் நாடு தழுவிய வகையிலேயே திட்டமிடப்படும்;

2) இதன் நன்மைகள் எந்தத் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்பதை அவ்வப்பகுதிகளின் மாகாண அரசாங்கங்களே நிர்ணயித்து வழங்கும்;

3) இச்செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேலைகளை அவ்வப்பகுதி களின் மாகாண அரச நிர்வாகங்களே மேற்கொள்ளும்.

**மாகாணங்களுக்கிடையேயான விடயங்கள்.**

45. தேசிய பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி ஆணைக்குழு.

46. மாகாணங்களுக்கிடையே இடம்பெறும் போக்குவரத்துக்கள் தொடர்பான நெறிமுறைகளை வழங்குதல்:-

1) கொழும்புக்கும் ஏனைய மாகாணங்களுக்குமிடையே நடைபெறும் பயணிகள் மற்றும் பண்டங்களின் போக்குவரத்துக்கள்;

2) தொடர்ச்சியாக உள்ள மாகாணங்களுக்கு அப்பால் நடைபெறும் பயணிகள் மற்றும் பண்டங்களின் போக்குவரத்துக்கள்.

47. மாகாணங்களுக்கிடையே ஓடும் நதிகள் தொடர்பான செயற்திட்டங்கள்:-

1) குறிப்பிட்ட செயற்திட்டத்தினால் கிடைக்கும் நீர்வள மற்றம் சக்தி வள நன்மைகளை தொடர்புடைய மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கான அளவுச் சூத்திரங்களை நிர்ணயித்தல்;

2) குறிப்பிட்ட நதி ஓடுகின்ற மாகாணங்களின் முதலமைச்சர்களின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய அணைத் திட்ட வேலைகளை திட்டமிடுதலும் கட்டுதலும்;

3) மாகாணங்களுக்கிடையே நதி நீர் வளம் தொடர்பான முரண்பாடுகள் எழும் வேளைகளில் நடுநிலையாளராகச் செயற்பட்டு நியாயமான தீர்வினை வழங்குதல்.

**சட்டமும் நீதிமன்றங்களும்**

48. உச்ச நீதிமன்றமும், உயர் நீதி மன்றங்களும்;

49. குற்றவியல் சட்டக் கோவை. மேலும், மாகாணங்களுக்கான சட்டவாக்க நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக இழைக்கப்படும் குற்றங்கள் நீங்கலாக உள்ள அனைத்து குற்றங்கள் தொடர்பான சட்டங்கள்;

50. குற்றவியல் சட்ட நடைமுறை;

51. சிவில் விவகார சட்டங்கள். அவற்றிற்கான நடைமுறைகள்;

52. நீதிமன்றங்களை அவமதித்தல் தொடர்பானவைகள்;

53. வங்குரோத்து மற்றும் இயலாமை என்பதை நிர்ணயித்தல்.

## பொது நிர்வாகம்

54. மத்திய அரசாங்கம் தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு உசிதமான நிர்வாக முறையைக் கட்டமைத்தல்;

55. அகில இலங்கை நிர்வாக சேவை மற்றும் அகில இலங்கை பொலிஸ் சேவை தொடர்பான விடயங்கள்;

56. மத்திய பொதுச் சேவைகள், மத்திய பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் அகில இலங்கை சேவைகளுக்கும் மத்திய அரச சேவைகளுக்கும் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியவர்களின் எண்ணிக்கைகளை நிர்ணயித்தல்;

57. மத்திய அரசால் நடாத்தப்படும் பொதுத்துறை நிறுவனங்கள்;

58. மத்திய அரசாலோ அல்லது அதன் திரட்டப்பட்ட நிதியிலிருந்தோ வழங்கப்பட வேண்டிய ஓய்வூதியங்கள்.

## நாடாளுமன்ற விவகாரங்கள்

59. நாடாளுமன்ற நடைமுறைகள் தொடர்பான விடயங்கள்;

60. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சபாநாயகர் மற்றும் உப சபாநாயகர் ஆகியோருக்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான விடயங்கள்;

61. நாடாளுமன்றத்துக்கும், அதன் உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்றக் கமிட்டிகளுக்கும் உரிய அதிகாரங்கள், முன்னுரிமைகள் மற்றும் சட்டரீதியான விலக்குகள். நாடாளுமன்றக் கமிட்டிகளுக்கு முன்னாலோ அல்லது நாடாளு மன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முன்னாலோ சாட்சியமளிக்க வேண்டிய அல்லது உரிய ஆவணங்களை ஒப்படைக்க வேண்டிய ஒருவரை கட்டாயமாகச் செய்ய வைத்தல்:

62. ஜனாதிபதி மற்றும் ஆளுநர்களுக்கான சம்பளங்கள், கொடுப்பனவுகள், முன்னுரிமைகள், லீவு எடுப்பதற்கான உரிமைகளை நிர்ணயித்தல். மத்திய மந்திரிகளுக்கான சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை நிர்ணயித்தல், தலைமை நீதியரசர், தேர்தல்களுக்கான தலைமை ஆணையாளர், கணக்காய்வு மாஅதிபர்களின் தலைவர் ஆகியோரது சம்பளங்கள், கொடுப்பனவுகள் லீவு எடுக்கும் உரிமைகள் மற்றும் தொடர்பான ஏனைய விடயங்களையும் நிர்ணயித்தல்.

**ஏனையவை**

63. தேசியரீதியான குடித்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் சமூக-பொருளாதார புள்ளிவிபரங்கள், தரவுகள் பற்றிய விடயங்கள்;

64. மத்திய மற்றும் மாகாண அரசுகளின் கணக்காய்வு நெறிகள்;

65. தலைமைத் தேர்தல் ஆணையாளர் மற்றும் மாகாண சட்டவாக்க நிரலில் குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்து தேர்தல்கள் தொடர்பான விடயங்கள்;

66. தேசிய சுவடிகள் காப்பகம், தேசிய தொல் பொருட்கள் காட்சியகம் மற்றும் நாடாளுமன்றத்தினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென பிரகடனம் செய்யப்பட்ட தொல்பொருட்பகுதிகள்;

67. பெரும் இயற்கை அழிவு, பாரிய சூழல் பாதிப்பு மற்றும் மோசமான நோய்கள் பரவுதல் போன்ற வேளைகளில் தலையிடலும் உதவுதலும்;

68. தேசிய ரீதியான ஆய்வுகள், புவியியல் வரைவுகள் மற்றும் இந்த சட்டவாக்க நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

69. வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களை அவதானிக்கும் தேசிய அமைப்புக்கள்.

★ ★ ★

இணைப்பு - 2

## மாகாண நிரல்

# மாகாண சட்டசபைகளால் மட்டுமே சட்டங்கள் ஆக்கப்படுவதற்கு உரியதான விடயங்கள்

01. மாகாண பொது நிர்வாகம் -

1) கீழ்வருவனவற்றை உருவாக்குதல், நிறுவுதல், அமைப்புக்களை ஏற்படுத்தல், மறுசீரமைத்தல் மற்றும் அவற்றுக்கான நெறிமுறைகளை ஆக்கி வழங்கல்.

- மாகாண அரசின் அமைச்சுச் செயலகங்கள்;
- அமைச்சு இலாக்காககளின் செயலகங்கள்;
- மாவட்ட செயலகங்கள், மாவட்ட அளவில் நேரடியாக மாகாண அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் அமைச்சுச் செயலகங்கள். பிரதேச செயலகங்கள் மேலும் கிராம சேவகா பிரிவு உட்படவுள்ள அடிநிலை அரச பொது நிர்வாகங்கள்.

2) மாகாண அரசின் கீழ் உள்ள நிர்வாகங்களுக்கான நிர்வாகிகளின் - அவர்கள் அகில இலங்கை சேவையைச் சேர்ந்தவர்களாயினும் அல்லது மாகாண சேவைகளைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களின் பதவி நியமனங்கள், பொறுப்பு நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாடுகள்;

3) தற்போதுள்ள மாவட்டங்களினதும், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளினதும், கிராம சேவகர் உப பிரிவுகளினதும் பிரதேச எல்லைகளை மாகாண நிர்வாகம் தனக்கு உகந்தாற்போல மீள்நிர்ணயம் செய்து கொள்ளல்;

4) தேசிய பொருளாதார திட்டமிடல் மற்றும் நிதி ஆணைக் குழுவின் ஒப்புதலுடன் புதிய மாவட்டங்களை உருவாக்குதலும் அத்துடன் அவற்றுக்கு பெயரிடல் அல்லது மாற்றுப் பெயரிடல்,

5) தேவைக்கேற்ப உதவி அரசாங்க அதிபர் பிரிவை அல்லது பிரிவுகளை உருவாக்குதல், மீள்நிர்ணயம் செய்தல் மேலும் பெயரிடல் அல்லது மறு பெயரிடல்.

02. மாகாண சேவைகள், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, மேலும் மாகாண சேவைகளுக்கான ஆளணிகளின் எண்ணிக்கைகளைத் தீர்மானித்தல்.

03. சட்டம் மற்றும் பொது ஒழுங்கை நிலை நாட்டலும் மாகாண பொலிஸ் அமைப்பு தொடர்பானவையும்:-.

1) மாகாண சிவில் பொலிஸ், மாகாண விசேட பொலிஸ் படை, மாகாண பொலிஸ் தொண்டர் படை, மாகாண புலன் விசாரணைப் பிரிவு, மாகாண

பொலிஸ் உளவுப் பிரிவு மற்றும் மாகாணத்தில் சட்டங்களையும் பொது ஒழுங்குகளையும் நிலை நிறுத்துவதற்கு அவசியமான அனைத்து அமைப்புக்களையும் உள்ளடக்கிய மாகாண பொலிஸ் அமைப்பை உருவாக்குதல், நிறுவுதல், அதன் அமைப்புக்களை ஏற்படுத்தல், அதற்கான நெறிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் வழங்குதல்.,

2) மாகாணம் முழுவதும் பொது ஒழுங்குகளைப் பேணுதல், முன்தடுப்புகள், தடுப்புக் கைதுகள், புலன் விசாரணைகளை மேற்கொள்ளல். மேலும் கீழே குறிப்பிட்டவை தவிர ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பான வழக்குத் தாக்கல் களை உரிய நீதி மன்றங்களில் மேற்கொள்ளுதல். அவை -

- ஜனாதிபதி, பிரதம மந்திரி, நாடாளுமன்ற சபாநாயகர், உப-சபாநாயகர், மத்திய அமைச்சர்கள் ஆகியவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகள்,
- நாடாளுமன்றத்தால் குறித்து உரைக்கப்படும் எந்தவொரு உயர் பதவி உத்தியோகத்தருக்கும் எதிரான குற்றங்கள் தொடாபான வழக்குகள்;
- நாணயங்கள் மற்றும் பணங்கள் தொடர்பான குற்றங்கள் மீதான வழக்குகள்;
- பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான குற்றங்கள் மீதான வழக்குகள்;
- சர்வதேச சட்டங்களை மீறிய குற்றங்கள் மீதானவை.

3) மாகாண பொலிஸ் ஆணைக்குழு.

4) மாகாணத்தின் சட்ட ஒழுங்குகளை நிலைநாட்டவென உரிய முதலமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் வழங்கப்படும் மத்திய பொலிஸ் படைப் பிரிவுகள் மற்றும் அரச ஆயதப் படைப் பிரிவுகளின் ஆளணிகள் மீதான நிர்வாகக் கட்டுப்பாடுகள்,

5) ஆயுதங்கள், தோட்டாக்கள் தவிர, மாகாண பொலிஸ் அமைப்புக்குத் தேவையான ஏனைய அனைத்து வசதிகள் மற்றும் அத்தியாவசியங்களை வழங்குவதுடன், அதற்குத் தேவையான ஆளணிகளின் எண்ணிக்கையை நிர்ணயித்தல்

6) மத்திய அரசின் நிர்வாகத்துக்கு உட்பட்டவை தவிர்ந்த ஏனைய சிறைச்சாலைகள், சீர்திருத்த நிலையங்கள் மற்றும் அவை போன்ற நிறுவனங்கள்.

04. கீழே குறிப்பிடப்பட்டவை உட்பட மாகாணத்தின் அபிவிருத்திக்கான திட்டமிடல் தொடர்பானவை -

1) மாகாணத்தின் சமூக-பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத் திட்டங் களையும், செயற் திட்டங்களையும் திட்டமிடலும் நிறைவேற்றலும்;

2) திட்டங்களுக்கான மூல உபாயங்களை வகுத்தலும், நடைபெற்ற நிறை வேற்றல்களை மதிப்பீடு செய்தலும்,

3) திட்டங்களின் முன்னேற்றங்களை வழிநடத்தலும், நெறிப்படுத்தலும்;

4) மாகாணத்தில் இடம்பெறும் அரச மற்றும் தனியார் துறை முதலீடுகளைக் கண்காணித்தல், மாகாணத்தில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஸ்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றங்கள் குறித்த கணிப்பீடுகளை மேற்கொள்ளல்.

05. நிலம் மற்றும் நில அபிவிருத்தி, நிலங்களை சுவீகரித்தல், அரச தேவைகளுக்கு உட்படுத்துதல், நிலங்களை மக்களுக்குப் பகிர்ந்தளித்தல், குடியேற்றத்திட்டங் களை மேற்கொள்ளல் போன்றன.

நிலம் - அதாவது நிலத்தின் மீதான உரிமை, நிலக்குத்தகை, நில ஒப்பந்தங்கள், நிலங்களைக் கையளித்தல்கள், நிலங்களை வெவ்வேறு தேவைகளுக்கு உட்படுத்துதல்கள், நிலப்பயன்பாடு, நிலங்கள் மீது மக்களைக் குடியேற்றுதல்கள், நிலங்களை வளப்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்றனவற்றை உள்ளடக்கும்:-

1) மாகாணத்திலுள்ள நிலங்கள் தொடர்பாக பதிவுகளை மேற்கொள்ளல், தொடர்பான அனைத்து பத்திரங்களையும் பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல்;

2) மாகாணத்துக்குள் உள்ள அனைத்து அரச நிலங்களும் மாகாண அரசின் ஆட்சியதிகாரத்துக்கு உட்பட்டவையாக இருக்கும்:

3) மாகாணத்திலுள்ள அரச நிலங்களை மாகாண அரசாங்கமே நிர்வகிக்கும், கட்டுப்படுத்தும் மற்றும் அதனது தேவைகளுக்காகப் பயன்படுத்தும்;

4) மாகாண சட்டமன்றத்தின் சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க மாகாண அதிகாரிகள் இந்த நிலங்களை மக்களுக்கும் மற்றும் பாவனைகளுக்கும் கையளித்தல்;

5) மத்திய சட்டவாக்க நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பாவனைகளுக்குத் தேவைப்படும் நிலங்களை மத்திய அரசு மாகாண அரசாங்கத்தின் உடன்பாட்டுடன் பயன்படுத்தும், எவ்வேளையிலாயினும், தேசிய தற்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தேவைகளுக்காக ஒரு மாகாணத் திலுள்ள நிலங்களைப் பயன்படுத்துவதில் மத்திய அரசுக்கும் அம்மாகாண அரசுக்கும் இடையில் உடன்பாடின்மை ஏற்படின் அவ்வேளையில் ஜனாதிபதி யானவர் தொடர்புபட்ட இரண்டு பகுதி நிர்வாகத்தினரதும் கருத்துக்களைத் தீர கேட்டறிந்து கொண்டதன் பின்னர் அவர் ஒரு ஆணையின் மூலம் உடனடித் தீர்வொன்றினை அறிவிக்கலாம். எனினும், ஜனாதிபதி பதினான்கு நாட்களுக்குள் அப்பிரச்சினைக்குத் தீர்வு தருவதற்காக உயர்தரமான நடுநிலை யாளர் குழுவொன்றினை நியமித்து அதன் மூலம் நிரந்தரத் தீர்வினை அறிவித்தல் வேண்டும்.

6) 1970க்குப் பின்னர் அரசினால் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களால் எங்கெல்லாம் சனத்தொகை இனவிகிதாசாரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதோ அந்தந்த மாவட்டங்களிலெல்லாம் முந்தைய நிலைமையை ஏற்படுத்தும் இலக்கை நோக்கி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அரச குடியேற்றத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

7) 1981ம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் எல்லாம் கலைக்கப்படல் வேண்டும்.

06. மாகாணத்தினுள் நீர்ப்பாசனம், நீர்ப்பாசனக் கால்வாய்கள் மற்றும் நீர் விநியோக வாய்க்கால்கள் -

1) மாகாணத்தினுள் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் செயற்திட்ட வேலைகளைத் திட்டமிடல், வரைதல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பன. இதில் மாகாணங்களுக்கிடையே ஓடும் நதிகள் மீது மேற்கொள்ளப்படும் அணைக்கட்டை திட்டமிடல், வரைதல், மற்றும் கட்டுதல் ஆகியன உள்ளடங்கமாட்டா.

2) மாகாணத்துக்குள்ளே அமைந்திருக்கும் அனைத்து நீர்ப்பாசன கால்வாய்கள் மற்றும் நீர் விநியோக வாய்க்கால்களை கட்டுவது, நிர்வகிப்பது, கட்டுப் படுத்துவது மற்றும் நெறிப்படுத்துவது போன்றன.

3) நீர் தேக்குதல், நீர் முகாமைத்துவம், நீர் வடிகால்கள், நீர் சேர்க்குமிடங்கள், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல்கள், நீர் வளவாய்ப்புக்கள் ஆகியவற்றை அதிகரிப்பதற்கும் முன்னேற்றமடையச் செய்யவும் வேண்டிய விடயங்களை ஆக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

07. விவசாயம் மற்றும் விவசாய சேவைகள்

1) மாகாணத்தில் விவசாய விரிவாக்கம், விவசாய முன்னேற்றம், அவற்றிற்கான கல்வி மற்றும் விவசாயம் தொடர்பான சேவைகள்,

2) மாகாணத்தினுள் உள்ள நீர்த் தேக்கங்கள் மற்றும் குளங்கள் தொடர்பான விவசாய அபிவிருத்தித் திட்டங்களைத் திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும்;

3) விவசாயம்சார் தொழிற்துறைகளை நிறுவுதல் மற்றும் முன்னேற்றுதல்;

4) மாகாணத்தினுள் விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்;

5) விவசாயப் பண்ணைகள் மற்றும் முளைபயிர்ப் பண்ணைகள்;

6) மண்வளத்தைப் பராமரித்தல்;

7) புதிய மற்றும் முன்னேற்றகரமான விவசாய இயந்திரப் பாவனைகள் மற்றும் தொழில் நுட்பங்களை முன்னேற்றுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்;

8) பயிர்க் கிருமிகள் - பூச்சிகள் தொடர்பான விடயங்கள்;

9) மாகாணத்தினுள் பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லிகள் - கிருமி நாசினிகள் மீதான நெறிப்படுத்தல் - கட்டுப்படுத்தல்.

08. இயற்கைச் சூழல் மற்றும் சுற்றாடற் சமநிலைகளைப் பேணல் தொடர்பான மத்திய அரசாங்கத்தின் தேசிய கொள்கைகளுக்கு இணங்கிய வகையாக மாகாணத்திலுள்ள காடுகளைப் பராமரித்தல் மேலும் வனத்துறை மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களை மேற்கொள்ளல்.

09. கால்நடை வளர்ப்பு, கால்நடை வைத்திய சேவைகள், கால்நடை வைத்திய மற்றும் மருந்து நிலையங்கள் மேலும், மிருகங்கள் மீது இடம்பெறும் கொடூரங் களைத் தடுத்தல்.

10. இடம்பெயர்ந்து சென்று மீன்பிடித்தல் மீதான கட்டுப்பாடுகள் - நெறிமுறைகள் உட்பட தேசத்தின் கடலெல்லைக்குள் மேற் கொள்ளப்படும் அனைத்துவகை மீன்பிடித்தல்கள் பற்றியவை.

11. உள்நாட்டுத் துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள்.

12. கல்வி மற்றும் கல்விச் சேவைகள் தொடர்பானவை:-

மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் பள்ளிக்கூடங்கள் நீங்கலாக மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிக்கூடங்கள் தொடர்பான பின்வரும் விடயங்கள் உட்பட அனைத்தும்:-

1) மாகாண அரசின் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் நிறுவுதல், முகாமை செய்தல், மேற்பார்வை செய்தல் மேலும் அவற்றிற்குத் தேவையானவற்றை வழங்குதல்.

2) அனைத்து சிறுவர் பாடசாலைகளையும், அனைத்து தனியார் பள்ளிக் கூடங்களையும் நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்,

3) ஆசிரியர்கள், பள்ளிக்கூட முதல்வர்கள், கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் துணை ஊழியர்கள் போன்ற மாகாண கல்வித்துறைக்கான ஆளணிகளைத் தேர்ந்தெடுத்தல், நியமனங்கள் செய்தல், இடமாற்றங்கள் செய்தல் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாடுகளை நிலைநாட்டல்;

4) கல்வித்துறையிலுள்ளோருக்கு சேவைக்காலத்தில் வழங்கப்படும் பயிற்சி உட்பட ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல்;

5) மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித் தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்;

6) மாகாண அரசின் பள்ளிக்கூடங்களுக்கான வகுப்பறைகள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பள்ளிக்கூட உட்கட்டுமானங்கள் என மாகாணக் கல்வித்துறைக்கான அனைத்து கட்டிடவேலைகளையும் மேற்கொள்ளல், மேலும் அவற்றைப் பராமரித்தலும், நெறிப்படுத்தலும்;

7) மாகாண அரசின் பாடசாலைகளில் கற்பித்தலுக்குத் தேவையான பல்வேறு வகை துணைப் பொருட்களையும், விஞ்ஞானகூட பொருட்களையும் மற்றும் உபகரணங்களையும், வகுப்பறைத் தளபாடங்கள் உட்பட ஏனைய தேவைகளையும் வழங்குதலும் விநியோகித்தலும்;

8) பள்ளிக்கூடங்களுக்கான பாடப்புத்தகங்களை அங்கீகரித்தல், அவற்றை உற்பத்தி செய்து அல்லது கொள்வனவு செய்து விநியோகம் செய்தல்;

9) கல்விக்கான வெகுமதிகள் மற்றும் கல்விக்கான உதவிகளை வழங்குதல்.

**பரீட்சைகள்:**

1) மாகாண பொதுச் சான்றிதழ்களுக்கான பரீட்சைகளை நடத்துதல்;

2) தேசிய பொதுச் சான்றிதழ்களுக்கான பரீட்சைகளுக்கான அடிப்படை ஏற்பாடுகளை வழங்குதல்;

3) தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொது வழிகாட்டுதல்களுக்கிணங்க பள்ளிக்கூடங்களுக்கான பாடத்திட்டங்களை உருவாக்கி வழங்குதல்;

4) வயது முதிர்ந்தோருக்கான கல்வி மற்றும் முறைசாரா கல்வித் திட்டங்களை நிறைவேற்றுதல்.

13. உயர் கல்வி தொடர்பானவை:-

1) மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் பல்கலைக் கழகங்கள் தவிர, ஏனைய பல்கலைக் கழகங்கள் அனைத்தும்;

2) குறிப்பிட்ட தொழில்கள் மீதான நிபுணத்துவம், கல்வி, விவசாயம், மீன்பிடி, நவீன தொழில்நுட்பங்கள், கூட்டுறவு போன்ற துறைகளிலும் கைத்தொழில் ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பாகவும் பட்டங்கள் வழங்கும் மாகாண மட்டத்திலான உயர்கல்வி நிறுவனங்கள்;

3) மாகாணத்தில் தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் புதிதாகத் தொடங்கப்படும் அவ்வாறான கல்லூரிகளும்;

4) துணை மருத்துவ ஆட்களுக்கான பயிற்சிகளை வழங்கும் கல்லூரிகள் - பாடசாலைகள்;

5) மாவட்டரீதியாக கல்வி அபிவிருத்திக்கான வேலைத் திட்டங்களை திட்டமிடலும் நிறைவேற்றலும்.

மோட்டார் வாகனங்கள், மோட்டார் போக்குவரத்துக்கள் தொடர்பாக (1) விதிகள் நெறிமுறைகளை வகுத்தல் நடைமுறைப்படுத்தல், (2) மாகாணமட்டத்தில் அவைகள் பதிவு செய்யப்படுதல், (3) மாகாண எல்லைக்குள் அவற்றை ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், (4) அவை தொடர்பான வரிகள் விதித்தல் போன்ற விடயங்கள்.

14. உள்ளூராட்சி அமைப்புகள்:-

1) மாகாணத்தினுள் தேவையான அனைத்து வகைப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களையும் உருவாக்குதலும், நிறுவுதலும். அவற்றுக்கான அதிகாரங்களையும் செயற் பொறுப்புக்களையும் வழங்குதலும். அத்துடன் அவற்றை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்;

2) உள்ளூராட்சிகளுக்கான தேர்தல்களை நடாத்துதல்;

3) மாகாணத்திலுள்ள பெருநகரங்களினதும், சிறுநகரங்களினதும் மற்றும் கிராம பிரிவுகளினதும் பிரதேச எல்லைகளை நிர்ணயம் செய்தல்;

4) புதிய நகர நிர்மாணங்கள் மற்றும் புதிய கிராமங்களை திட்டமிடலும் கட்டி யெழுப்புதலும்;

5) தேசிய நெடுஞ்சாலைகள் நீங்கலாக ஏனைய வீதிகளினதும் மற்றும் நகரங்கள் கிராமங்களினதும் பெயர்களை நிர்ணயித்தல்.

15. வீடுகள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் தொடர்பானவை:-

1) மாகாண வீட்டுத் திட்டங்களைத் திட்டமிடல்:

2) மாகாண அரசாலும் மாகாணத்தினுள் மத்திய அரசினாலும் மேற்கொள்ளப்படும் அனைத்து வீட்டுத்திட்டங்களினதும் வேலைகளை நிறைவேற்றுதல், மற்றும் கண்காணித்தல்;

3) மாகாணத்தில் மத்திய அரசாங்கத்தின் விசேட வீட்டுத் திட்டங்களாலும் மற்றும் மாகாண அரசினாலும் கட்டப்படும் வீடுகள் யார் யாருக்கு வழங்கப்படும் என்பதை நிர்ணயித்து நடைமுறைப்படுத்தல்;

4) மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து வீட்டுக் கட்டுமானங்களுக்கான நெறிமுறைகளை வழங்குதலும், தொடர்பான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தலும்;

5) சுயவீட்டுத் திட்டங்களுக்கு உதவுதலும் மற்றும் வீட்டுக்கடன்கள் வழங்கு தலும்;

6) கட்டிட வேலைகளுக்கான பொருட்களை வழங்கும் நிலக்கீழ் பகுதிகள், கற்குன்றுகள் மற்றும் இவ்வளங்கள் கொண்ட வேறு நிலப்பிரதேசங்கள் ஆகியவற்றை நெறிப்படுத்தலும் கட்டுப்படுத்தலும்;

7) வாடகைகளின் எல்லைகளை நிர்ணயித்தலும், குடியிருப்பாளர்களின் நியாய மான நலன்களைப் பேணுதலும்..

16. நகரங்களின் அபிவிருத்தி தொடர்பாக:-

1) நகரப் பகுதிகளில் பொருளாதார, சமூக மற்றும் உட்கட்டுமானங்களின் அபிவிருத்திக்கான ஒருங்கிணைந்த திட்டமிடல்களை முன்னேற்றுதல்;

2) மாகாணத்திலுள்ள பெருநகரங்கள் சிறுநகரங்கள் மற்றும் நகர்மயமான பகுதிகளின் நீளவிரிவாக்கம், அகலவிரிவாக்கம், முன்னேற்றம் ஆகிய வற்றுக்கும், மற்றும் பதிய நகர நிர்மாணங்களுக்குமான திட்டவரைவுகளை ஆக்குதலும் அவற்றை நடைமுறையில் நிறைவேற்றுதலும்;

3) நகரங்கள் தோறும் அடிப்படைத் திட்டவரைவுகளுக்கமைய அனைத்துக் கட்டிட வேலைகளையும் கட்டுப்படுத்துதலும், நெறிப்படுத்துதலும்.

17. சுகாதார நிர்வாகம்:-

1) மத்திய அரசின் நிர்வாகத்துக்குட்பட்ட விசேட வைத்தியசாலைகள் மற்றும் அவ்வாறான மருத்துவக் கல்வி வைத்தியசாலைகள் தவிர மாகாணத்திலுள்ள ஏனைய அனைத்து பொது வைத்தியசாலைகளும், கிராம வைத்திய சாலை களும், மகப்பேறு மருத்துவமனைகளும் மற்றும் பொது மருந்து நிலையங் களும்;

2) பொது சுகாதார சேவைகள், சுகாதாரக் கல்லி, போஷாக்கு, குடும்ப சுகாதார நலன், மேலும் தாய்மார் மற்றும் குழந்தைகள் நலன் பராமரிப்பு;

3) மாகாணத்தின் சுகாதார அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்;

4) உள்ளூர் மருந்துகள் உட்பட மருந்துகள் தொடர்பானவை;

5) மாகாணத்தில் தனியார் மருத்தவ வசதிகளைக் கண்காணித்தல், மருத்துவ விடுதிகள் மற்றும் நோய்மூல பரிசோதனை நிலையங்கள் மீது தேவையான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தல் உட்பட மருத்துவ சேவைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் தொடர்பானவைகள்;

6) ஆயுர்வேத மற்றும் கீழைநாட்டு பாரம்பரிய வைத்திய முறைகளைக் கொண்ட மருந்து நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளை நிறுவுதல், முன்னேற்று தல், நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்;

7) மாகாண அரச மருத்துவ சேவையில் உள்ளவர்களுக்கான மேற்பட்டப் படிப்புகள் மற்றும் உயர் பயிற்சிகளுக்கான கல்வி உதவிகள் மற்றும் ஊக்கவசதிகளை வழங்குதல்;

8) மாகாணத்தில் தேவையான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களின் இருப்புக்களை போதிய அளவில் இருக்கும் வகையைப் பேணுதல்

18. பொது சுகாதாரம் மற்றும் சுத்தம் பேணல்:-

1) குடிநீர் விநியோகம்;

2) கழிவகற்றும் கால்வாய்கள்;

3) முன்னெச்சரிக்கை சுகாதார நடவடிக்கைகள்;

4) சுகாதாரத்தைப் பேணுதல் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்;

5) உணவுகள் மற்றும் சுற்றாடல் தொடர்பான சுகாதார நடவடிக்கைகள்;

6) சுகாதார முன்னேற்றம் மற்றும் சுத்தம் தொடர்பானவைகள்.

19. மத்திய நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பெருந்தெருக்கள் தவிர்ந்த அனைத்து வீதிகளும்: உள்நாட்டு நீர்வழிப் பாதைகளும்: இவையிரண்டோடும் உள்ள பாலங்கள் மற்றும் நீக்கடவைகளும், மாகாணத்தினுள் உள்ள அனைத்து வீதி களிலும் நடைபெறும் பயணிகள் போக்குவரத்து மற்றும் பொருட்களின் போக்குவரத்துக்கள் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை விதித்தல்.

20. ரயில்வே தவிர மாகாணத்தினுள் நடைபெறும் அனைத்து புவி மேற்பரப்பின் மீதான போக்குவரத்து சேவைகள்;.

21. மத்திய நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவை தவிர்ந்த ஏனைய அனைத்துவகைப்பட்ட மின்சாரம் மற்றும் எரிசக்திகள் தொடர்பான விடயங்கள்.

22. மாகாணத்தின் கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கான விடயங்கள். பின்வருவன உள்ளடங்கலாக:-

1) மாகாணத்தின் தொழில் அபிவிருத்தியை முன்னேற்றுதல்;

2) மாகாணத்தின் தொழில் அபிவிருத்திக்கான திட்ட வரைபுகளை மேற் கொள்ளல், அவற்றை நிறைவேற்றல்;

3) நாடாளுமன்றத்தின் சட்டங்களுக்கு அமையவும், மத்திய அரசின் கொள்கை களுக்கு ஒப்பவும் மாகாணத்தில் வெளிநாட்டு முதலீடுகளை முன்னேற்றுதலும் நெறிப்படுத்தலும்;

4) மாகாண அரசின் பொதுத்துறை தொழில் நிறுவனங்களையும் மற்றும் அனைத்து தொழிற்சாலைகளையும் நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல், மேற்பார்வை செய்தல், கண்காணித்தல்;

5) தொழில் ரீதியான கல்விகள், ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சிகளை முன்னேற்றுதல்;

23. நாடாளுமன்றத்தால் குறித்துரைக்கப்பட்டுள்ளவை தவிர்ந்த ஏனைய அனைத்து கனிவளப்பகுதிகள் மற்றும் கனிவளங்கள்.

24. சர்வதேச அமைப்புக்களின் உதவியினால் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உட்பட அனைத்து கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள்.

25. வேலைவாய்ப்பு:-

1) மாகாணமட்டத்தில் வேலைவாய்ப்புக்களைத் திட்டமிடலும் நிறைவேற்றலும்;

2) மாகாணத்திலான விசேட வேலைவாய்ப்புத் திட்டங்கள்;

3) மாகாணத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்களை முன்னேற்றல்;

4) மாகாணத்தில் தொழில்நுட்பரீதியான ஆட்பலங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள்.

26. புனர்நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகள் மற்றும் சமூக சேவைகள்:-

1) அழிக்கப்பட்டுள்ள மற்றும் சீரழிந்துள்ள நகரங்கள், கிராமங்கள் மற்றும் பொது நிறுவனங்களின் கட்டுமானங்களை மீளமைத்தல் மற்றும் புனரமைத்தல்;

2) இருப்பிடங்கள் மற்றும் உடமைகளை இழந்து நிற்போருக்கும், சீரழிக்கப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் உரிய நிவாரணங்களை, நஷ்டஈடுகளை வழங்குதல்;

3) இடம்பெயர்க்கப்பட்டவர்களுக்கும் அங்கவீனமாக்கப்பட்டவர்களுக்கும் உரிய நிவாரணங்களை வழங்குவதோடு அவாகளை மீளக்குடியமர்த்தலும் புனர்வாழ்வு வழங்கலும்;

4) யுத்தம், புயல், கொடிய நோய் பரம்பல் மற்றும் விதி விலக்கான காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளித்தல்;

5) குழந்தைகள் நல மற்றும் சிறுவர் நன்னடத்தை சேவைகள்;

6) பரிதாபத்துக்கு உள்ளாகியிருக்கும் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு வழங்குதல்;

7) உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ அல்லது சமூக ரீதியாகவோ ஊனமாகியிருப்போரின் நலன்களைக் கவனித்தல்;

8) சமூகக் காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள்;

9) வேலைவாய்ப்பின்றி இருப்போரின் நலன் பேணல்.

27. நாடாளுமன்றத்தினால் ஆக்கப்பட்டிருக்கும் தேசிய கொள்கைகளுக்கிணங்க மாகாணத்தில் சுற்றலாத் துறையை முன்னேற்றுதல், விருத்தி செய்தல் மேலும் நெறிப்படுத்துதல்;

28. மாகாணத்தினுள் உள்ள நீரோட்டங்கள், நீர்ப்பரப்புக்கள், வளைகுடாப்பகுதிகள், மற்றும் கடற்கரைகள்;

29. ஹோட்டல்கள், மோட்டல்கள், விடுதிகள், அரசாங்க பங்களாக்கள் மற்றும் இளைப்பாறும் அகங்கள்;

30. மாகாணத்தின் கலைகளை, இலக்கியங்களை மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை முன்னேற்றுதல் விருத்தி செய்தல்;

31. கூட்டுறவு அமைப்புக்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும், மேலும் அவற்றின் தேர்தல்கள் தொடர்பானவைகளும்.;

32. மாகாணத்தில் அரச உணவுப் பங்கீடு மற்றும் உணவுக் கையிருப்பு ஆகியவற்றின் வழங்கல்கள், கொள்வனவுகள், விநியோகங்கள் மற்றும் பராமரிப்புக்கள்;

33. மாகாணத்திலுள்ள சந்தைகள் மற்றும் விற்பனை மையங்கள்;

34. மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், பொருட்கள் கையிருப்பு அகங்கள் மற்றும் பொருட் கிடங்குகள்;

35. இந்த நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் அளவைகள்.;

36. மாகாணத்தின் எல்லையளவுக்குள் என நிறுவப்படும் கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பெனிகள் - அவை வியாபார நோக்குடையவையோ அவ்வாறல்லாதவையோ - ஆகியவற்றின் உருவாக்கம், செயற்பாடுகள் மற்றும் சட்டபூர்வமான மூடுதல் ஆகியவற்றிற்கான நெறிமுறைகள்.

37. நாடாளுமன்றத்தினால் ஆக்கப்பட்டுள்ள தேசியக் கொள்கைகளுக்கிணங்க மாகாணத்தில் பெண்கள் மற்றும் இளைஞர்களின் விவகாரங்கள்..

38. மத்திய அரசின் நிர்வாகத்திலுள்ள தொழிற்சாலைகள் தவிர, மாகாணத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள், தொழிலாளர் நலன்கள் மற்றும் தொழிலாளர் களுக்கும் நிறுவனங்களுக்குமிடையேயான முரண்பாடுகள தொடர்பானவை.

39. நாடாளுமன்றத்தின் நெறிமுறைகளுக்கிணங்க மாகாணத்தில் தொலையொளிபரப்பு, வானொலிபரப்பு உட்பட அனைத்து ஊடகங்களோடும் தொடர்பானவை.

40. மாகாணத்திலுள்ள சமயங்கள் மற்றும் சமயத் தலங்கள்:-

    1) வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் புனித தலங்களின் சூழல்களையும் பேணல்,

    2) வெவ்வேறுபட்ட சமய நம்பிக்கைகள் மற்றும் வழிபாடுகளுக்கிடையில் சமத்துவத்தை நிலைநாட்டல்,

    3) வெவ்வேறுபட்ட சமய வாழ்வுகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் பராமரித்தல்,

    4) திருவிழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு முன்னேற்றமளித்தலும் அவற்றை நெறிப்படுத்தலும்.

41. மகிழ்ச்சி தரும் விடயங்கள் தொடர்பாக:-

1) சினிமா மண்டபங்கள், பொழுது போக்கும் தியேட்டர்கள் மற்றும் மகிழ்ச்சி யளிக்கும் நடவடிக்கைகள் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்;

2) விடுமுறை காலத்துக்கான இடங்கள் மற்றும் அமைப்புக்களை விருத்திசெய்தல், அவை தொடர்பாக ஊக்குவித்தல்;

3) மகிழ்ச்சிகரமாக பொழுதுபோக்கும் பூங்காக்கள் மற்றும் தளங்களை விருத்தி செய்தல்,

42. மாகாணத்தில் விளையாட்டுக்கள் மற்றும் விளையாட்டுக்களுக்கான உட்கட்டு மானங்கள்.

43. தொல்பொருட்கள் தொடர்பாக:-

தேசிய தொல்பொருள் ஆய்வுக் கழகத்தின் ஒத்துழைப்புடன் மாகாணத்திலுள்ள தொல்பொருட்கள் காணப்படும் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அகழ்ந்தெடுத்தல்களை மேற்கொள்ளுதல்; மேலும், நாடாளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் மத்திய அரசினால் பேணிக்காக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்டவற்றைத் தவிர ஏனைய அனைத்து தொல்பொருள் இடங்களையும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளையும் பேணிப்பராமரித்தல்.

44. மாகாண நூலக சேவை மற்றும் பொது நூலகங்களை நிறுவுதல் நிர்வகித்தல், அத்துடன் மாகாணமெங்கும் நூலகங்களை விருத்தி செய்தல், முன்னேற்றுதல்.

45. தேசிய அரும்பொருட் காட்சியகங்கள் மற்றும் தேசிய யுத்த நினைவிடங்கள் தவிர, மாகாணத்திலுள்ள சுவடிகள் காப்பகம், அரும்பொருட்காட்சியகங்கள் மேலும் அரிய நினைவு இடங்கள் மற்றும் சின்னங்கள்.

46. நாளாந்த மற்றும் வாராந்த செய்தித் தாள்கள் நீங்கலாக, மாகாண மட்டத்தில் அச்சுவேலைகள் மற்றும் வெளியீடுகளை அபிவிருத்தி செய்தலும் நெறிப்படுத்தலும்.

47. வியாபார நோக்கற்ற மற்றும் கூட்டுத்தாபன வகைப்படாத இலக்கிய அமைப்புக் களை நெறிப்படுத்துதல்.

48. மத்திய அரசின் நிபந்தனைகளுக்கிணங்கிய வகையில் மாகாண அரசாங்கத்துக் கென உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் வாங்குதல்.

49. மாகாணத்துக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு உதவிகள் வருவதை முன்னேற்றுதலும் அவற்றை நெறிப்படுத்தலும்.

50. மத்திய அரசின் நெறிமுறைகளுக்கு இணங்க இயங்கும் மாகாண நிதி நிறுவனங்கள் மற்றும் கடன் நிறுவனங்கள்.

51. மாகாண அரசின் வரவு செலவுத் திட்டம்.

52. மாகாண சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் மாகாணத்தின் சமூக பொருளாதார புள்ளிவிபரங்கள் திரட்டல்.

53. மத்திய அரசால் நிர்ணயிக்கப்படுவதற்கென நாடாளுமன்றத்தால் குறித்துரைக் கப்பட்டுள்ள பண்டங்கள் நீங்கலாக, மாகாணத்தில் விற்பனைக்கு உட்படும் பொருட்கள் மீதான விலைக்கட்டுப்பாடுகள் மற்றும் நெறிமுறைகள்.

54. நேரடி முதலீடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள். பின்வருவன உள்ளடங்கலாக:

1) மாகாண அரசுத் துறைத் தொழில் நிறுவனங்கள்

2) நாடாளுமன்றத்தின் விதிகளுக்கமைய ஏற்றுமதி-இறக்குமதி

3) மத்திய அரசின் விதிகளுக்கும் நெறிகளுக்கும் இணங்கிய வகையில் வங்கிகள், காப்புறுதி, கப்பல் போக்குவரத்து போன்ற தொழில் நடவடிக்கை களை மேற்கொள்ளல்.

55. அடகு பிடித்தல், நிறுவன ரீதியற்ற வகையில் கடன் வழங்குதல் மற்றும் அவ்வாறான கடன் வழங்குவோர் தொடர்பான நெறிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள்.

56. அனைத்து வகைப்பட்ட மதுபானங்களின் உற்பத்தி, கையிருப்பு, கொள்வனவு, விற்பனை மற்றும் அவற்றோடு தொடர்பான அனைத்து விடயங்களும்..

57. மாகாண அரசுக்குரியதான வரிகள், சுங்கவரிகள் மற்றும் கட்டணங்களை நிர்ணயித்தல், திரட்டுதல். மேலும் வேறு வகைப்பட்ட வருமானங்களைப் பெறுதல்.

58. மாகாண அரசின் திரட்டு நிதியிலிருந்து மாகாண அரசினால் வழங்கப்பட வேண்டிய ஓய்வுகாலக் கொடுப்பனவுகள்.

59. மாகாண சட்டமன்றத்தின் சபாநாயகர், உப சபாநாயகர் மற்றும் உறுப்பினர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை நிர்ணயித்தல்.

60. மாகாண சட்ட மன்றத்தினதும் அதன் உறுப்பினர்களினதும் அதிகாரங்கள், முன்னுரிமைகள் மற்றும் சட்டரீதியான விலக்குகள் ஆகியவற்றை நிர்ணயித்தல்; மேலும், மாகாண சட்ட மன்றக் கமிட்டிகளுக்கு முன்னாலோ அல்லது மாகாண சட்ட மன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முன்னாலோ சாட்சியமளிக்க வேண்டிய அல்லது உரிய ஆவணங்களை ஒப்படைக்க வேண்டிய ஒருவரை கட்டாயமாகச் செய்ய வைத்தல்,

61. முதலமைச்சர், மற்றும் மாகாண அமைச்சர்களுக்கான சம்பளங்கள், கொடுப்பனவு கள், முன்னுரிமைகள், போன்றவற்றை நிரணயித்தல்; மேலும் மாகாண அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களின் சம்பளங்கள், கொடுப்பனவுகள், முன்னுரிமைகள், லீவு எடுப்பதற்கான உரிமைகள் மற்றும் தொடர்பான ஏனைய நிபந்தனைகளையும் நிரணயித்தல்.

62. மாகாண அரச நிர்வாகங்களின் கணக்குகளைப் பரிசோதித்தல்

63. பிறப்புக்கள், திருமணங்கள் மற்றும் இறப்புக்களின் பதிவுகள்.

64. திருமணம், விவாகரத்து, குழந்தைகள், சிறார்களைத் தத்தெடுத்தல், உயில்கள், உயிலின்றி வழங்கப்படும் சொத்துக்கள், வம்சாவழி சொத்துரிமை மற்றும் தனிநபர் உரிமைச் சட்டம் ஆகியவை நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்திற்கு ஒத்ததாக இருக்க வேண்டும்.

65. மாகாண எல்லைக்கு உட்பட்ட சொத்துக்களின் உரிமை மாற்றம், காணி உறுதி பதிவுகளும் அது தொடர்பான பத்திரங்களும்.

★★★

தொடர்புக்கு

29-ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு
தொலைபேசி : +94652225179

ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி : +94212222022

தொலைபேசி : +94112505372
தொலைநகல் : +94112552840
மின் அஞ்சல் : efrlf_pathmanabha@yahoo.com
இணையம் : http://www.eprlf.net